Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | கார்த்திகை - 07 | 22-11-2004 | திங்கட்கிழமை | ஓசை -278

22 NOV 2004
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

க ணே சா ந கை ய க ம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.- 024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.- 021-2225987
(சி-10705)



# புலிகளின் அலுவலகம் மீதான தாக்குதலுக்கு

# சிறில. படைத்தரப்பே பொறுப்பேற்க வேண்டும்!

## மட்டு-அம்பாறை அரசியல்துறையினர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

**மட்டுநகர், களுவாஞ்சிக்குடி விடுதலைப்புலிகளின் அலுவலகங்கள் மீது நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற தாக்குதலை மட்டு-அம்பாறை அரசியல் துறையினர் கண்டித்துள்ளனர். இதற்கான முழுப்பொறுப்பையும் சிறிலங்கா படைத்தரப்பே ஏற்க வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.**

இது குறித்து மட்டு- அம்பாறை அரசியல் துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இராணுவக்கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் இயங்கி வரும் அரசியல் பணிமனைகளான மட்டு நகர், களுவாஞ்சிக்குடி ஆகிய இரண்டு அலுவலகங்கள் மீது 20-11-2004 அன்று நள்ளிரவு நடந்த குண்டு வீச்சுச் சம்பவங்களை வன்மையாகக்கண்டிக்கிறோம். இப்படியான சம்பவங்களால் எதிர்காலங்களில் எமது அரசியல் பணியை இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மேற்கொள்ளும் போராளிகளுக்கு உயிர் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கின்றது. இப்படியான சம்பவங்கள் நடைபெறாமல் தடுப்பது சிறிலங்காப்படைத் தரப்பினரின் முழுமையான பொறுப்பாகும்.

இவ்விரு காரியாலயங்களும் சிறிலங்கா பொலிஸ் காவலரணிலிருந்து (12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அலுவலகங்கள் மீது கிரனேட் வீச்சு புதுக்கதை கூறுகிறது இராணுவம்!

(லண்டன்)

மட்டக்களப்பு நகரில் களுவாஞ்சிக்குடியிலும் விடுதலைப் புலிகளின் அரசியல்துறை காரியாலயங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கிரனேட் வீச்சுக்கள் விடுதலைப் புலிகளாலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சிறிலங்கா ராணுவப் பேச்சாளர் தயாரட்ணாநாயக்க தெரிவித்துள்ளார். இது தொடர்பாக லண்டன் பி.பி.சி.யின் சிங்கள சேவையான சந்தேசியவிற்குதெரிவிக்கையிலேயேதயாரட்ணாநாயக்க இவ்வாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில் இந்தத் தாக்குதல்களைப் பார்க்கும் போது இதை வெளியில் இருந்து யாரும் வந்து செய்ததாகத் தென்படவில்லை. (12ஆம் பக்கம் பார்க்க)

## காவலரண்களைத் தொடர்ந்து அப்பக்கடைக்கும் புத்தூர் சந்தியில் மக்களால் தீவைப்பு!

கொடிகாமம் புத்தூர் சந்தியில் இராணுவ காவலரண்கள் மக்களால் தீவைக்கப்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதியில் இயங்கி வந்த சிறிலங்காப் படைகளின் அப்பக்கடை நேற்று முன்தினம் மாலை இப்பகுதி பொது மக்களால் தீயிட்டு கொழுத்தப்பட்டது.

கடந்த பல மாதங்களாக சமூகச் சீரழிவை மேற்கொண்டு வந்த சக்திகளுக்கு பின்புலமாக இருந்து வந்த அப்பக்கடைக்கே பொது மக்களால் தீயிடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. அப்பக்கடை என்ற போர்வையில் ஆபாசத்திரைப்படங்கள், மதுபானங்களும், போதைப் பொருட்களும் இங்கு விநியோகம் செய்யப்பட்டு வந்ததாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வல்லையில் பலியான இளைஞர்களின் இறுதிக்கிரியைகளில் பெருமளவு மக்கள் கூட்டம்!

(வல்வெட்டித்துறை)

கடந்த வெள்ளிக்கிழமை வல்வை சிதம்பராக்கல்லூரிமைதானத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட இரண்டு இளைஞர்களதும் உடல் நேற்று அவர்களது வீட்டில் இருந்து 11.00 மணியளவில் அஞ்சலி மண்டபத்துக்கு எடுத்து வரப்பட்டு அஞ்சலிநிகழ்வுகள் கிராமசேவகர் சிவபாலசிங்கம் தலைமையில் ஆதி சக்தி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க காரியாலயத்தில் இடம் பெற்றது. தலைமை உரையினையடுத்துஆதிசக்தி விளையாட்டுக்கழக உறுப்பினர் த.நவகுலராசா வல்லை வி.க.தலைவர் தங்கவேல், வடமராட்சி வடக்கு கடல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் பொது முகாமை (12ஆம் பக்கம் பார்க்க)

### மீசாலை படையினரின் சூட்டில் காயமடைந்த

## இளைஞனின் சகோதரிக்கு இராணுவத்தினர் மிரட்டல்

மீசாலையில் நேற்று முன்தினம் சிறிலங்காப்படைகளால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் போது படுகாயமடைந்த மகாலிங்கம் சுந்தரராசன் என்பவருடைய சகோதரி ஒருவர் சிறிலங்கா பொலிசார் மற்றும் புலனாய்வுத் துறையினரால் அச்சுறுத்தப்பட்டதாக தெரிய வருகிறது. காயம் அடைந்த தன்னுடைய சகோதரனை பார்ப்பதற்கு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சென்ற சமயமே அங்கு வந்துள்ள சிறிலங்காப் பொலிசார் மற்றும் புலனாய்வுத் துறையினர் இச்சம்பவத்திற்கும், படையினருக்கும் தொடர்பில்லை என்றும் இதை புலிகள் தான் மேற்கொண்ட (12ஆம் பக்கம் பார்க்க)


## மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் யாழ்.இல் உணர்வுபூர்வ ஆரம்பம்

தமிழீழ மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் நேற்று வைபவ ரீதியாக யாழ். குடாநாட்டினில் ஆரம்பமாகியுள்ளது. குறிப்பாக யாழ். குடாநாட்டிலுள்ள மாவீரர் துயிலுமில்லங்கள் அனைத்திலும் தேசியக் கொடி யேற்றலுடன் மாவீரர் எழுச்சி வார நிகழ்வுகள் ஆரம்ப மாகியுள்ளது.

நேற்றுக் காலை வலிகாமம் பிரதேசத்திற்கான கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை யாழ். மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி. கலைவிழி ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை யாழ். மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் விஜிதரன், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் ஜெயராம் உள்ளிட்டோர் ஏற்றி வைத்தனர்.

வடமராட்சியின் உடுப்பிட்டி எள்ளங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தினில் இடம் (12ஆம் பக்கம் பார்க்க)





கொடிகாமம் துயிலுமில்லத்தில்...

### வல்வெட்டித்துறை சூட்டுச் சம்பவம்

## காயமுற்றவரை ராணுவம் கூட்டிச் சென்றமை சட்ட திட்டங்களை மீறிய செயல்

யாழ். வல்வெட்டித்துறை பகுதியில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை இரு இளைஞர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் காயமடைந்த நிலையில் வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த பொ. தெய்வேந்திரம் என்பவரை படையினர் தமது முகாமிற்கு அழைத்துச் சென்றமை வைத்தியசாலை சட்ட திட்டங்களை மீறிய செயல் எனக் குற்றம்சாட்டப்பட்டது.

வைத்தியசாலை சட்டதிட்டங்களை மதியாது நேற்று முன்தினம் மாலை அத்துமீறி வல்வெட்டித்துறை வைத் தியசாலையினுள் நுழைந்த சிறிலங்காப்படையினர் அங்கு சிகிச் (12ஆம் பக்கம் பார்க்க)



### மாவீரர் நாள் பிரசுரம்

மாவீரர் நாள் தொடர்பான வர்ணப் பிரசுரம் நாளைய ஈழநாதம் நாளேட்டுடன் இணைக்கப்படவுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.



## மாவீரர் நாள் நவம்பர் -27

**மாவீரர்களே! உங்கள் தியாகத்தால் எங்கள் தேசியம் உருவாக்கம் பெறுகின்றது; உங்கள் நினைவுகளா[illegible] எங்கள் உறுதி வைரம் பெறுகின்றது.**

தமிழீழத் தேசியத்தலைவர்
மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

## வரிவிளம்பரம்

**வேழன் பதிப்பகம்**

உங்கள் சகலவிதமான அச்சக வேலைகளையும் கணினிமூலம் வடிவமைத்து ஓவ்செற்றில் அச்சிட்டுப்பெற்றுக்கொள்ள வேழன் பதிப்பகம். கனகபுரம் வீதி, கிளிநொச்சி.

(5284)


# சிரமதானப்பணி

மாவீரர் நாளை முன்னிட்டு நேற்றுக்காலை 9.00 மணியளவில் தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் காந்தருபன் அறிவுச்சோலை மாணவர்கள், இனியவாழ்வு இல்ல மாணவர்கள், பாரதி இல்ல மாணவர்களினாலும் மற்றும் இல்லங்களின் ஆசிரியர்கள், பணியாளர்கள், போராளிகள், ஏராளமான பிரதேச வாழ் மக்களினாலும், மாவீரர்களின் பெற்றோர்களினாலும் துயிலுமில்ல வளாகம் தூய்மைப்படுத்தும் பணியும், சீரமைத்தல் பணிகளும் நடைபெற்றன. இப்பணியை கொட்டும் அடை மழையின் மத்தியிலும் உணர்வெழுச்சியுடன் முன்னெடுத்தமையைக் காணக்கூடியதாக இருந்தது.

## 5லட்சம் பரீட்சார்த்திகள

எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள கல்விப்பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சையில் மூன்று இலட்சத்து 74 ஆயிரத்து 411 பாடசாலை பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர். ஒரு இலட்சத்து 26 ஆயிரத்து 819 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் இந்த பரீட்சையில் தோற்றவுள்ளனர் இதற்காக நாடளாவிய ரீதியில் 3227 பரீட்சை மையங்கள் அமைக்கப்படவுள்ளன. (32)

# பிரதேச ரீதியாக நடைபெற்றுவரும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் பல நேற்று பிரதேச ரீதியாக நடைபெற்றுள்ளதுடன், இன்றும் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

யாழ்.பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை 10.00 மணியளவில் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் இடம் பெற்றது. யாழ்.பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையும், யாழ். மாவட்ட சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தினதும் ஏற்பாட்டில் இக் கௌரவிப்பு நிகழ்வு சிறந்த முறையில் இடம் பெற்றது. இந் நிகழ்வின் முதன் நிகழ்வாக மாவீரர்களின் பெற்றோர்கள் நாதஸ்வரம் மற்றும் பாண்ட் வாத்தியத்துடன் பெருமாள் கோயிலில் இருந்து அழைத்து வரப்பட்டார்கள். இந்நிகழவின் பொதுச் சுடரினை யாழ்.பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன், நல்லூர் பிரதேச மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகள் ஆகியோர் ஏற்றி வைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை யாழ்.பிரதேச கடற்புலிகளின் பொறுப்பாளர் தென்றல் மாறன் ஏற்றிவைத்தார். இந்நிகழ்வில் சிறப்புரைகளை யாழ்.பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன், நல்லூர் பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள், தென்றல் மாறன், மாவீரர்களின் பெற்றோர் ஆகியோர் நிகழ்த்தினர்.

துணுக்காய் பிரதேசத்திற்குட்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிப்பு நிகழ்வு மல்லாவி மத்திய கல்லூரிமண்டபத்தில் நேற்று காலை 10.00 மணிக்கு முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி. வேழினி தலமையில் இடம் பெற்றது. மல்லாவி மத்திய கல்லூரி மாணவர்களின் பாண்ட் வாத்திய இசை முழங்க மாவீரர்களின் பெற்றோர்கள் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது.

பொதுச் சுடரினை முல்லை மாவட்ட அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சு.சின்னண்ணன் ஏற்றியதைத் தொடர்ந்து, தமிழீழ தேசியக் கொடியை சாள்ஸ் அன்ரனி படையணி சிறப்புத் தளபதி லெப்டினன்ட் கேணல் நகுலன்ஏற்றி வைக்க, முதல் மாவீரன் லெப்டினன்ட் சங்கர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு ஈகச் சுடரினை மல்லாவி மத்திய கல்லூரி உப அதிபர் திருமதி. பா. புஸ்பவதி ஏற்றினார். மலர்மாலையினை துணுக்காய் அரசியல்துறைப் பொறுப்பாளர் புனிதன் அணிவித்தார். மலர் வணக்கம், அகவணக்கம் என்பன இடம் பெற்று அரங்க நிகழ்வு ஆரம்பமானது.

வரவேற்புரையை கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் அ.அமிர்தலிங்கம் நிகழ்த்த, கருத்துரைகளை முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், துணுக்காய்ப் பிரதேச மாதர் சங்கத் தலைவி திருமதி . விஜயலக்சுமி ஆகியோர் வழங்க, சிறப்புரையை சாள்ஸ்அன்ரனி படையணி சிறப்புத்தளபதி லெப்டினன்ட் கேணல் நகுலன் ஆற்றினார். கலை நிகழ்வுகளில் கவிதை உரையாடலை ஓய்வு பெற்ற அதிபர் திருமதி.மனோன்மணி ஆசிரியை நிகழ்த்த, கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. நிகழ்வில் மாவீரர்களின் பெற்றோர்கள் கௌரவிக்கப்பட்டனர். பொது அமைப்பு பிரதிநிதிகள், பொது மக்கள், போராளிகள் பலரும் கலந்து கொண்டனர்.

மன்னார் நானாட்டான் பிரதேசத்தில் நேற்று மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது.

நானாட்டான் பிரதேச பொறுப்பாளர் முகுந்தன் தலைமையில் இந் நிகழ்வுகள் இடம் பெற்றது.

269 மாவீரர்களின் பெற்றோர் பவனியாக வாத்திய இசைக்குழுவுடன் அழைத்துவரப்பட்டு நானாட்டான் மத்தியமகாவித்தியாலய மண்டபத்தில் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது. பொதுச்சுடரினை மாவட்ட மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர் இளவரசி ஏற்றினார். தேசியக்கொடியினை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இனியவன் ஏற்றினார். அத்துடன் மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து இனியவன் உரையாற்றினார். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெற்றன.

விசுவமடுப் பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களிற்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று றெட்பானா பாரதி வித்தியாலயத்தில் விசுவமடு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் வ.பத்மநாதன் தலைமையில் மு.பகல் 11.00 மணியளவில் இடம்பெற்றது. பொதுச்சுடரை கிளி. மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் பூவிழி ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியை கிளி. மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றி வைத்தார். மாவீரர்களின் பெற்றோர்களை மங்கள இசை முழங்க இளங்கோபுரம் சோழர் இல்லச் சிறுவர்களால்மலர்தூவி மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். தொடர்ந்து மண்டபத்தில் வரவேற்புரையை கிளி. மாவட்ட பெண்கள் மேம்பாட்டுத்தலைவி திருமதி. சிவகாம்பிகை சாமிநாதன் ஆற்றினார். அதனைத் தொடர்ந்து பாடசாலை ஆசிரியை திருமதி. பாலமூர்த்தி நிகழ்த்தினார். சோழர் இல்ல சிறுவர் பூங்கா சிறார்களின் கோலாட்டம், காவடியாட்டம், தீப நடனம், மாவீரர் அஞ்சலி என்பன நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து தூயவன் அரச[illegible]றிவியல் கல்லூரியைச் சேர்ந்த புலிமறவன், மாஸ்ரர் சிறப்புரையை ஆற்றினார். சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி போராளிகளின் கவியரங்க நிகழ்வுகள் இடம்பெற்றது. அதனையடுத்து கிளி. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் காண்டீபன் சிறப்புரையை ஆற்றினார். இறுதியாக மாவீரர்களின் பெற்றோர்களிற்கு மாவீரர்களின் நினைவாக தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன.

கிளிநொச்சி பிரதேசத்திலுள்ள மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளனர்.

கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டின் பேரில் நாளை பகல் 10.00 மணிக்கு கிளிநொச்சி பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலர் தலைமையில் மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு இடம் பெறவுள்ளதுடன், கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யோகபுரம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்று போராளியாக இணைந்து மாவீரர்களான மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நாளை பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(சோ,14,36,மி,24)

# மாட்டுடன் உந்துருளி மோதியதில் இரு இளைஞர்கள் படுகாயம்

## -மாடு இறந்தது

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சியில் உந்துருளி மாட்டுடன் மோதியதில் உந்துருளியில் சென்ற இருவர் படுகாயமடைந்ததோடு மாடு இறந்துள்ளது.

மேற்படி சம்பவம் பற்றி தெரியவருவதாவது கிளிநொச்சியிலிருந்து திருமுறிகண்டி நோக்கி சென்று கொண்டிருந்த உந்துருளி வீதியால் வந்த மாட்டுடன் மோதுண்டது. கிளிநொச்சி கல்வித்திணைக்களத்திற்கு முன்பாக நடந்த இச் சம்பவத்தின் போது பலத்த அடிபட்ட மாடு அந்த இடத்திலேயே உயிரிழந்தது. இதே வேளை உந்துருளியின் முன்பகுதி கடும் தேசத்திற்குள்ளானதோடு உந்துருளியில் பயணித்த இரு இளைஞர்களும் காயமடைந்தனர். இவர்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இரவு வேளைகளில் கால்நடைகள் வீதியால் நடமாடுவது போக்குவரத்திற்கு பெரும் சிரமமாக அமைவதனால் கால்நடை வளர்ப்போர் இதனை கருத்தில் கொள்ள வேண்டியதும் அவசியமானதாகும். (ச)

# தேசியத் தலைவரின் பிறந்த தினத்தில் கணினிப் பயிற்சி நிலையம் திறப்பு

நெடுங்கேணி பிரதேச அரசியல் துறையினரின் ஏற்பாட்டில் தேசியத் தலைவர்அவர்களின் பிறந்த தினத்தை வெகு சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் அன்றைய தினம் நெடுங்கேணி நகர்ப் பகுதியில் அமைந்துள்ள நாகதம்பிரான் ஆலய முன்றலில் 50 பானைகளில் பொங்கல் செய்து மக்களுக்கு பரிமாறவுள்ளனர்.

மேலும் அன்றைய தினம் நெடுங்கேணி நகர்ப்பகுதியில் இலவச கணினிப்பயிற்சி நிலையம் ஒன்றும் திறந்து வைக்கப்படவுள்ளது. இக் கணினிப் பயிற்சி நிலையத்தை தமிழீழ மாணவர் அமைப்பு, பிரதேச அரசியல் துறையினரும் இணைந்து நடாத்துகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் அந்நாளில் நெடுங்கேணி நகர்ப்பகுதி வீதி மருங்கிலும் மற்றும் பாடசாலை, பொது இடங்கள் எனப் பல இடத்திலும் பயன் தரு மரக்கன்றுகளையும் நாட்டவுள்ளனர்.

எனவே மேற்படி நிகழ்வுகளில் அனைத்து மக்களையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றனர் பிரதேச அரசியல் துறையினர். (கு,ச)


## சாவு அறிவித்தல்

**அமரர்**

**தனுஸ்கோடி சுப்பிரமணியம்**

நெடுந்தீவு கிழக்கை பிறப்பிடமாகவும் இல.876, ஆறுமுகம் வீதி வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட தனுஸ்கோடி சுப்பிரமணியம் என்பவர் காலமாகிவிட்டார்.

காலம்சென்ற பார்பதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், வேலாயுதம் கட்டைக்காடு, மகேஸ்வரி வட்டக்கச்சி, இராஸ்-வேரி கல்மடு, காலம்சென்ற யோகேஸ்வரி கருணாநிதி [ஆனந்தி] வட்டக்கச்சி, குணேஸ்வரி கல்மடு ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலம் சென்ற தவமணி, முருகேசு அரசினர் வைத்தியசாலை வட்டக்கச்சி, காலம்சென்ற துரைசிங்கம், கனகரத்தினம் தயாநிதி,சண்முகராசா ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மம்மில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்!
பிள்ளைகள்

(5295)



## வீரவணக்கம்

வீரமரணம்



22 – 11 – 1990

**கப்டன் வதனன்**
தங்கராசா சிறிஇராயேஸ்வரன்



23 – 11 – 1996

**லெப். வதனன்**
தங்கராசா காண்டீபன்

இவர்களுடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

தகவல்:
மருமக்களான
போராளி
செந்தூரன், முகிலன்.

(சி-5294)


# சீன விமானம் நடுவானில் வெடித்து சிதறியது

## விமானிகள் உட்பட 53 பேர் உயிரிழப்பு

(பீஜிங்)

**சீனாவின் பயணிகள் விமானம் ஒன்று நடுவானில் வெடித்து சிதறியதில் அதில் பயணம் செய்த 47 பயணிகள் உட்பட 53 பேர் உயிரிழந்துள்ளனர். சீனாவில் மங்கோலியா பகுதியில் உள்ள பாவோட்டோ பகுதியில் இருந்து 47 பயணிகளை ஏற்றிக் கொண்டு இவ்விமானம் புறப்பட்டது எனவும் இந்த விமானம் பாம்பரிடர் சீ.ஆர்.ஜே 200 வகையைச் சேர்ந்தது எனவும் தெரிவிக்கப்படுகிறது.**

பாவோட்டோ நகரில் இருந்து ஷாங்காய் சின்கியு வழியாக 600 கி.மீ தொலைவில் உள்ள பீஜிங் நகருக்கு ஓடு தளத்தை விட்டு வெளியேறி 2 கி.மீ தொலைவில் விமானம் பறந்து கொண்டு இருந்த போது திடீரென நடுவானில் வெடித்துச் சிதறியது.



இதனால் விமானத்தின் பெரும் பகுதி தீப்பிடித்தபடி அருகில் இருந்த மிகப்பெரிய ஏரியில் விழுந்தது. சில பகுதிகள் ஏரியின் அருகே இருந்த நான்காய் பூங்காவில் விழுந்தன. இதனால் அங்கிருந்த வீடுகள் தீப்பிடித்து எரிந்தன.

இந்தக் கோரவிபத்தில் விமானத்தில் பயணம் செய்த 47 பேர், 2 விமானிகள், 4 பணிப் பெண்கள் உட்பட 53 பேர் பலியானார்கள். விமானம் ஏரியில் விழுந்ததை அறிந்ததும் 100 இற்கும் மேற்பட்ட தீயணைப்பு படையினர் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்றனர்.ஒரு பகுதியினர் பூங்காவில் ஏற்பட்ட தீ விபத்தை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இன்னொரு பகுதியினர் படகில் விரைந்து சென்று விமான விபத் தில் இறந்து போனவர்களின் உடல்களை ஏரியில் இருந்து மீட்கும் பணியில் ஈடுபட்டனர். இதுவரை 17 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.விமானம் எப்படி வெடித்துச் சிதறியது என்று தெரியவில்லை. இது குறித்து ஆராய விமான அதிகாரிகளின் அவசரக் கூட்டம் நடந்தது. அப்போது வெடித்துச் சிதறிய விமானத்தில் ஒரு வெளிநாட்டுப் பயணி பயணம் செய்தது தெரிய வந்தது. அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவர் என்பது தெரியவில்லை. அவர் விமான விபத்திற்கு காரணமாக இருக்கலாமா என்று ஆராயப்பட்டு வருகிறது.

இந்த விமானம் 50 பயணிகளை ஏற்றிச் செல்லும் அளவுக்கு தயாரிக்கப்பட்ட ஜெட் விமானம். இது 21 மீற்றர் நீளம் கொண்டது. சீன கிழக்கு விமான நிலைய நிறுவனம் சார்பில் இயக்கப்பட்டு வந்தது. சீனாவில் கடந்த 2002 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் திகதி கடைசியாக விமான விபத்து நடந்தது. இதில் 112 பேர் பலியானமை குறிப்பிடத்தக்கது.

## 27 பேர் பலி

பொலிவியாவில் பால்கா மாகாணத்தில் ஆறு ஒன்றில் பார ஊர்தி பாய்ந்ததில் 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேற்படி பார ஊர்தியில் விவசாயிகள் பலர் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.



டாக்காவில் சந்தைப் பகுதியில் ஏற்பட்ட தீவிபத்திலிருந்து பொருட்களை மக்கள் நகர்த்துகின்றனர். இத் தீவிபத்தில் 2000 கடைகள் எரிந்ததுடன், 12 தீயணைக்கும் படையினர் உட்பட 50 பேர் வரைக் காயமடைந்துள்ளனர்.

# பங்களாதேஷின் சந்தைப்பகுதியில் தீ விபத்து

## 2000 கடைகள் தீக்கிரை: 50 பேர் படுகாயம்

(டாக்கா)

பங்களாதேஷின் தலைநகரான டாக்காவிலுள்ள சந்தைப்பகுதியொன்றில் நேற்று திடீரென்று தீப் பற்றிக் கொண்டதில் ஒருவர் உயிரிழந்ததுடன் 50 பேர் காயமடைந்துள்ளனர். சந்தையில் ஏற்பட்ட தீயின் காரணமாக சுமார் இரண்டாயிரம் சந்தைக் கடைகள் முற்றாக எரிந்து சாம்பராகியுள்ளன. தீயணைப்புப் படையினர் பல மணித்தியாலங்கள் எடுத்துக் கொண்ட முயற்சியின் காரணமாகத் தீ அணைக்கப்பட்டதாக பங்களாதேஷ் பொலிசார் தெரிவித்துள்ளனர். இதன்போது தீயணைப்புப் படைவீரர்கள் 10 பேர் காயமடைந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இந்தத் தீவிபத்து மின் ஒழுக்கின் காரணமாக ஏற்பட்டிருக்கலாமென்று பொலிசார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

# பலூஜாவில் தங்கியுள்ள தீவிரவாதிகளை முற்றாக ஒழிப்பதென்பது உறுதியற்றது

## அமெரிக்க இராணுவத் தளபதி

ஈராக்கின் பலூஜா நகர் மீது இந்த மாதம் மேற்கொள்ளப்பட்ட தீவிர தாக்குதல் காரணமாக அங்கு தங்கியிருந்த வெளிநாட்டு மற்றும் உள்ளூர்க்கிளர்ச்சியாளர்களை தீர்த்துக் கட்ட முடியும் என்று உறுதியாகக் கூறமுடியாதொன்று அமெரிக்க இராணுவத் தளபதியொருவர் தெரிவித்துள்ளார். இதற்கிடையில் பாக்தாத் நகரின் பொலிஸ் நிலையத்தின் மீது மறைந்திருந்து தாக்கிய கெரில்லாக்கள் அமெரிக்க வீரர் ஒருவரைச் சுட்டுக் கொலை செய்துள்ளனர். இதன்போது 9 பேர் காயமடைந்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மற்றுமோர் இடத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 3 பொலிசார் இறந்துள்ளார்களொன்றும் அறிவிக்கப்படுகின்றது.

ஈராக்கிய பாதுகாப்பமைச்சர் கருத்து வெளியிடுகையில் பலூஜா நகரில் தங்கியிருந்து தப்பியுள்ள கிளர்ச்சிவாதிகள் தற்போது பாக்தாத்தை வந்தடைந்துள்ளார்களென்றும் குறிப்பிட்டுள்ளார்.

# பலஸ்தீன தலைவர் அரபாத்தின் மருத்துவ அறிக்கை சமர்ப்பிப்பு




பலஸ்தீன அதிபராக இருந்த யசீர் அரபாத் உடல் நலக்குறைவு காரணமாக பிரான்சில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு தீவிர சிகிச்சை அளித்தும் பலன் அளிக்காமல் 11 ஆம் திகதி மரணம் அடைந்தார்.

அரபாத் உயிருடன் இருக்கும் போதே கொல்ல முயற்சி நடந்தது. எனவே அவரது மருத்துவ அறிக்கையை என்னிடம் தர வேண்டும் என்று அவரது மனைவி சுஹா வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

ஆனால் பலஸ்தீன அரசு அரபாத்தின் மருமகன் நாசர் அல்கித்வாயிடம் ஒப்படைக்க வேண்டும் என்று வலியுறுத்தி இருந்தார். இருப்பினும் நெருங்கிய உறவினரிடம் தான் மருத்துவ அறிக்கை ஒப்படைக்கப்பட வேண்டும் என்று பிரான்ஸ் அதிபர் ஜாக் சிராக் கூறினார்.

இதையடுத்து யசீர் அரபாத்தின் மருத்துவ அறிக்கை அவரது மனைவி சுஹாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த தகவலை சுஹாவின் வக்கீல்கள் பிலிப்பிளாண்டேட், ஜீன்மாரி ஆகியோர் தெரிவித்தனர். மருத்துவ அறிக்கையை சுஹா படித்து வருகிறார். அவர் படித்து முடித்த பிறகு அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி தெரிவிக்கப்படும் என்றனர்.

# புதிய செயற்கைக் கோள் ஒன்றை நாஸா விண்ணில் ஏவியது



விண்வெளியில் வெகு தூரத்தில் ஏற்படும் வெடிப்புக்களை ஆராய்வதற்காக புதிய செயற்கைக்கோள் ஒன்றினை அமெரிக்க விண்வெளி முகவர் நிலையமான நாஸா விண்ணில் ஏவியுள்ளது.

அமெரிக்கா, இத்தாலி, பிரிட்டன் ஆகியவற்றின் கூட்டுத் தயாரிப்பான இந்த துரித செயற்கைக் கோள் எதிர்பாராமல் அண்ட வெளி வெடிப்புக்களினால் ஏற்படக்கூடிய புதிய கருத்துக்களை உடனுக்குடன் தனது சாதனத்தில் பதிவு செய்து காட்டக்கூடிய வசதியைக் கொண்டுள்ளது.

# பாகிஸ்தானின் எந்தப் பகுதிக்கும் பத்திரிகையாளர் செல்ல அனுமதி



முஷாரப்

(லாகூர்)

எல்லைப்பகுதி உட்பட பாகிஸ்தானின் எந்த ஒரு பகுதிக்கும் பத்திரிகையாளர்கள் பயணம் செய்யலாம் என்று பாகிஸ்தான் அதிபர் முஷாரப் அறிவித்துள்ளார்.

பாகிஸ்தானைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் குழு ஒன்று அண்மையில் இந்தியா வந்தது. இக்குழு காஷ்மீருக்கு நேரில் சென்று உண்மை நிலவரத்தை கண்டறிந்தது. காஷ்மீரில் பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களையும், முதல்வர் முப்தி முகமது சயீத்தையும், தீவிரவாதிகளால் பாதிக்கப்பட்ட மக்களையும் பாகிஸ்தான் பத்திரிகையாளர்கள் குழு சந்தித்துப் பேசியது. இந்தியாவைச் சேர்ந்த பல்வேறு பத்திரிகையாளர்கள் தற்போது பாகிஸ்தான் சென்றுள்ளனர். இவர்கள் பாகிஸ்தான் ஆக்கிரமித்துள்ள காஷ்மீருக்குச் செல்லவும் திட்டமிட்டுள்ளனர். இதன் மூலம் எல்லையில் நிலவும் உண்மை நிலவரத்தை அறிய முடியும் என்று இந்திய பத்திரிகையாளர்கள் கருதுகின்றார்கள்.

இந்நிலையில் பத்திரிகையாளர் சங்க தெற்கு ஆசியக் கூட்டமைப்பின் 4 ஆவது மாநாட்டை பாகிஸ்தான் அதிபர் பெர்வேஷ் முஷாரப் நேற்று முன்தினம் லாகூரில் துவக்கி வைத்துப் பேசும் போது கூறியதாவது:

பத்திரிகையாளர்களின் தாராளமயமாக்கல் கொள்கையில் நான் உறுதியான நம்பிக்கை வைத்துள்ளேன். பேச்சு சுதந்திரம், தகவல் பெறும் வாய்ப்பு ஆகியவற்றை நாங்கள் பெற்றிருக்க வேண்டும். பத்திரிகை மற்றும் தொலைக் காட்சிகளை நாங்கள் தாராளமயமாக்க வேண்டும் என்றார்.



மொசூல் நகரில் தீவிரவாதிகளின் நிலைகளில் ஈராக் கொமாண்டோக்கள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டு கைது செய்யப்பட்ட தீவிரவாதிகளின் கண்களையும், கைகளையும் கட்டியுள்ளனர்.

# கழிவுநீர் வாய்க்கால்களில் போடும் தடைகளால் வீதிகள் சேதமடையும் அபாயம் அதிகரிப்பு!


(அலுவலக செய்தியாளர்)

**பொதுமக்கள் சிலரின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் காரணமாக போக்குவரத்து வீதிகள் சீர்கெடும் துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு வருவதனைக் காணக்கூடியதாகவுள்ளது.**

வீதியோரங்களில் கழிவு நீர் செல்வதற்காக வெட்டப்பட்டுள்ள வாய்க்கால்களுக்குள் தடைகளை நிறுவி வெள்ளத்தினால் அரித்து வரப்படும் மணல்களை சேகரிக்க முயல்வதன்காரணமாக அவ்விடங்களில் வெள்ளநீர் செல்ல முடியாது தேக்கம் கொண்டுவீதிகளின் மேலால் பாய்வதன் காரணமாக வீதிகள் அரிப்புக்குள்ளாகுவதுடன் வீதிகளும் சீர்கெட்டு மக்கள் போக்குவரத்து மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு வருகின்றது.

அதேபோன்று கழிவுவாய்க்கால்களில் வேலிகளில் உள்ள தடிகளை வெட்டும் பொழுது கழிவுகளைப் போடுவதன்காரணமாகவும் மழைநீர் தேக்கம் கொண்டு வீதிகளை ஊடறுத்துப் பாய்வதன் காரணமாக வீதிகள் பாதிப்புக்குள்ளாகும் நிலை தோன்றியுள்ளது.

எனவே இப்படியான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்டவர்கள் நிறுத்தி வீதிகளைப் பாதுகாக்க முன்வரவேண்டுமென பொது மக்கள் வேண்டியுள்ளனர். (சோ)



# குளங்களைப் பாதுகாக்கக் கோரல்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நியாப் I,மற்றும் நிகொட் நிறுவனத்தால் பல குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. தற்போது பருவமழை கடுமையாகப் பெய்து வருவதால் குளங்களில் நீர்மட்டம் மிகவும் அதிகரித்துக் கொண்டு வருகின்றது. இதனால் குள அணைக்கட்டில் தாக்கங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் உண்டு. எனவே குளங்களின் பங்காளர்கள், கமக்கார அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் என்பன கண்காணிப்புடன் இருக்குமாறும் அவ்வாறு பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புக்கள் அவதானிக்கப்படுமாயின் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கிளிநொச்சி மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (சோ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வதிவிடப் பயிற்சி

மாகாண சிறுவர் செயற்றிட்டத்தின் கீழ் கல்வி அமைச்சின் ஒழுங்கமைப்பில் கிளி/வலயக் கல்விப் பணிமனையும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் இணைந்து முன்னெடுக்கும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வதிவிடப் பயிற்சிநெறி கடந்த வெள்ளிக்கிழமை தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளி/மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகியது.

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவரும், முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளருமான சி.சிவநாதன் தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில், கிளி/வலயக் கல்விப் பணிப்பாளர் ப. அரியரத்தினம், தமிழர் புனர்வாழ்வுக் கழக கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் இ.ராஜன் ஆகியோர் முன்பள்ளிச் செயற்பாடுகள் தொடர்பான கருத்துரைகளை வழங்கினர்.

இப்பயிற்சியின் வளவாளராக தமிழ்மொழிப் பாட சேவைக்கால ஆலோசகர் திருமதி. மலர்நாயகி கலந்து கொண்டார் மூன்று நாள் அமர்வாக நடைபெறும் இப்பயிற்சி நெறியில் 25 ஆசிரியர்கள் பயிற்சியாளர்களாக கலந்து கொண்டனர்.

# சமூக பொருளாதார அபிவிருத்திக் குழு புனரமைக்க கலந்துரையாடல்

சமூக பொருளாதார அபிவிருத்திக்குழு புனரமைப்பு சம்பந்தமான கலந்துரையாடல் நேற்று முன்தினம் காலை 11.00 மணிக்கு பளை, மாசார் பாடசாலையில் கிராம சேவையாளர் வல்லிபுரம் தலைமையில் இடம்பெற்றது இக்கலந்துரையாடலில் புனர்வாழ்வுக் கழக மாவட்ட இணைப்பாளர் வ.றீகன், அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் சி.கணேசபிள்ளை, பச்சிலைப்பள்ளி அபிவிருத்திக்கழக புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் இளங்கோ, பளைக் கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர். வின்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து அப்பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் உரையாற்றுகையில், எதிர்வரும் 21தொடக்கம் 27ஆம் திகதிவரை மாவீரர் தின காலப்பகுதியில் மக்கள் அனைவரும் பொதுஇடங்கள் மற்றும் பாடசாலைகள் என்பவற்றை சிரமதானம் மூலம் சுத்தம் செய்வதுடன் மாவீரர்களின் கனவுகளை வெற்றிபெறச் செய்வதற்கு அனைத்துத் தமிழீழ மக்களும் அணிதிரள வேண்டுமெனவும் குறிப்பிட்டார்.

# போர் ஊர்தி பேணுகை பகுதியில் கருத்தூட்டல்

கிளி.போர் ஊர்தி பேணுகைப் பகுதியில் தமிழீழ காவல்துறை வாகனப் போக்குவரத்துப் பிரிவினரால் வீதி ஒழுங்கு விதிகள் சம்பந்தமான கருத்தூட்டல் வகுப்பு அண்மையில் நடாத்தப்பட்டது.

இந் நிகழ்வில் வீதிப்போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன் துணைப்பொறுப்பாளர் ஜீவானந்தன ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள். இந் நிகழ்விற்கு போர் ஊர்தி பேணுகைப் பகுதி தளப் பொறுப்பாளர் ரமேஸ் தலைமை தாங்கினார். இதில் சாரதிகள் பணியாளர்கள் என 100 இற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

## கலந்துரையாடல்

இன்று காலை 11.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல திணைக்களங்களின் தலைவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளமையால் தவறாது கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சகல உ.அ அதிபர்களையும், திணைக்களத் தலைவர்களையும் கலந்துகொள்ளுமாறு கிளி. அரச அதிபர் கேட்டுள்ளார்.

# கரைச்சி தெற்கு ப.நோ.கூட்டுறவுச் சங்க நெற்களஞ்சியம் உருத்திரபுரத்தில் திறப்பு

(அலுவலகசெய்தியாளர்)

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உருத்திரபுரம் மத்திய நெற்களஞ்சியமும், விற்பனை மையமும் நேற்றுமுன்தினம் காலை 11.00 மணியளவில் மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகத்தால் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் வை.குகராசா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை அரசாங்க அதிபர் ஏற்றிவைக்க தமிழீழத் தேசியக்கொடியினை உருத்திரபுரம் வலயப்பொறுப்பாளர் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து கூட்டுறவுக் கொடியினை சங்கத்தின் துணைமுதல்வர் ச.சந்திரசேகரம் ஏற்றிவைத்தார். அடுத்து மங்கல விளக்கினை சங்கத்தின் முகாமையாளர் இ. அன்ரன் ரூபராஜ் ஏற்றிவைத்தார்.

அடுத்து உருத்திரபுரம் மத்திய நெற்களஞ்சியத்தின் புதிய கட்டடத்தின் பெயர்ப்பலகையினை திரை நீக்கம் செய்து வைத்த அரசாங்க அதிபர் தி .இராசநாயகம் புதிய மண்டபத்தின் நாடாவினையும் வெட்டி அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

அடுத்து உருத்திரபுரம், பல்பொருள் விற்பனைமையத்தின் பெயர்ப்பலகையினையும் அரச அதிபரே திரைநீக்கம் செய்துவைத்தார். பின்னர் பல்பொருள் விற்பனை மையத்தின் கட்டடத்தை உருத்திரபுரம் வைத்திய அதிகாரி கோபாலபிள்ளை நாடாவினை வெட்டி திறந்துவைத்தார்.பின் அரச அதிபர் பொருட்களை கொள்வனவு செய்து வியாபாரத்தைத் தொடக்கி வைத்தார்.

நெற்களஞ்சிய வளாகத்தில் தென்னங்கன்றுகள் நாட்டும் வைபவத்தையும் அரச அதிபரே ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து புதிய மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் தலைமையுரையினை அடுத்து வரவேற்புரையினை முகாமையாளர் ஆற்றினார். அடுத்து ஆசியுரையினை உருத்திரபுரம் வைத்திய அதிகாரி நிகழ்த்தினார்.

சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட அரசாங்க அதிபர் சிறப்புரையாற்றினார்.




இந்நிகழ்வில் கூட்டுறவு சார்ந்த ஊழியர்களும் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (கு)



உதயநகர் கிழக்கு நாகதம்பிரான் ஆலய வீதியில் தொடர்மழையின் மத்தியிலும் பாலம் அமைக்கப்பெற்றுவருவதனைப்படத்தில் காணலாம் மக்களின் போக்குவரத்தை கருத்திற்கொண்டே இப்பணி விரைவு படுத்தப்பட்டுள்ளது. (படம் சோதி)

# வவுனியா நொச்சிமோட்டை ஏ-9 வீதியில் வாகனம் புதைந்து போக்குவரத்து தடை

(செட்டிகுளம்)

ஏ-9 சாலையின் ஊடான போக்குவரத்து நேற்றுமுன்தினம் காலை முதல் ஐந்து மணித்தியாலங்கள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்தது. வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிச்சென்ற எரிபொருள் தாங்கி ஒன்றும் பாரஊர்தி ஒன்றும் சாலையில் புதையுண்டதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டது. நொச்சிமோட்டைப் பகுதியில் ஏ-9 சாலையை ஊடறுத்து இராணுவம் முகாம் அமைத்துள்ளது. இதன் காரணத்தாலே வீதி அபிவிருத்தி அதிகாரசபை தனியார் காணி ஒன்றினுள்ளாக வீதி அமைத்து போக்குவரத்துக்கு அனுமதித்துள்ளனர் அண்மையில் இவ்வீதி படுமோசமான முறையில் குன்றும் குழியுமாக இருந்ததன் காரணமாக கனரக வாகனம் கொண்டு வீதியில் கிரவல் மண் போட்டு மீள அமைக்கப்பட்டது எனினும் பூரணமாக வீதிசெப்பம் செய்யப்படவில்லை இதன் காரணத்தினாலேயே வாகனம் புதைந்ததாக இராணுவத்தினர் தெரிவித்தனர். வாகனம் வீதியின் குறுக்காக இருந்ததன் காரணமாக காலை 7 மணிமுதல் 11.45 வரை வீதி போக்குவரத்துகள் முற்றாக துண்டிக்கபட்டு. பல நூற்றுக் கணக்கான வாகனங்கள் வீதியின் இரண்டு பக்கத்திலும் நின்றன. பேருந்துகளில் வந்த மக்கள் தமது பொருட்களை எடுத்து கொண்டு நடந்து சென்றனர் பரீட்சைக்கு வந்த பல்கலை கழகத்தின் மாணவர்கள் உரிய நேரத்தில் பரீட்சைக்கு போக முடியாத நிலை ஏற்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர். இந்த தனியார் காணிக்கு உரியவர் வவுனியா நீதிமன்றில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எதிராகவும் இராணுவத்தினருக்கு எதிராகவும் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.(21)

## 250 பேர் இரத்ததானம்

(மன்னார்)

தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் பிறந்ததினத்தை முன்னிட்டு மன்னார் பொது வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கும்பணி இடம்பெறவுள்ளது.

250பேர் இரத்ததானத்தை வழங்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான ஏற்பாடுகளை மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ். இனியவன் மேற்கொள்ளவுள்ளார். (மி)

# நல்லூர் பிரதேச மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு

(நல்லூர்)

நல்லூர்ப்பிரதேச மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நல்லூர் தேசிய எழுச்சிப்பேரவை செயலாளர் ந.பாலகுமார் தலைமையில் இடம் பெற்றது.

மாவீரர்களின் பெற்றோர்கள் கலாசாலை வீதியில் உள்ள வைரவர் ஆலயத்தில் இருந்து நாதஸ்வர, தவில் மற்றும் பாண்ட் வாத்திய இசையுடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து பொதுச்சுடரினை யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன் ,யாழ்ப்பாணம் நல்லூர் கோட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூமகள், முத்துத்தம்பி மகாவித்தியாலய அதிபர் க.சிவராசா, யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சொலமன் சூ.சிறில், யாழ்ப்பாணம் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் சிவஞானசேகரம் ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியினை யாழ். மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்தார். ஈகச்சுடரினை மாவீரர்களின் பெற்றோர்கள் ஏற்றி வைத்தனர்.

சுமார் இருநூறுக்கு மேற்பட்ட பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

நினைவுரைகளை யாழ்.மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவிழி, யாழ்ப்பாணம் நல்லூர்கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செழியன் ஆகியோர் நிகழ்த்தினார்கள். (41)

# தேசியத் தலைவரை வாழ்த்தி யாழ். மகளிர் அமைப்புக்கள் கேடயம் வழங்கல்

தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரனின் 50ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்ட மகளிர் அமைப்புகள் ஒன்றிணைந்து கேடயம் ஒன்றை வழங்கவுள்ளன. "பெண்ணினத்தின் வல்லமையின், வரலாற்றை எழுதிய தலைவா- நீ, பல்லாண்டு காலம் வாழ, வாழ்த்துகின்றோம் நாம்..." என்ற வாசகம் பொறிக்கப்பட்ட இக்கேடயம் நாளை தேசியத்தலைவர் அவர்களிடம் சென்றடையும் வண்ணம் நாளை அனுப்பிவைக்கப்படும் என யாழ். மாவட்ட மகளிர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

# கண்டி வீதியின் இருமருங்கும் சிரமதானமூலம் சீரமைப்பு

மாவீரர் நாளை முன்னிட்டு யாழ்.தென்மராட்சியூடாகச் செல்லும் கண்டிவீதியின் ஓரங்கள் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகிறது.

தேசிய எழுச்சிப் பேரவையினர் பொது அமைப்பினர்,மாணவர்கள், மாதர்சங்கங்கள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், பொது மக்கள் ஆகியோர் இணைந்து இச் சிரமதானப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை மாவீரர் நாள் மிகச் சிறப்பான முறையில் தென்மராட்சி பகுதிகள் எங்கிலும் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதனையிட்டு பிரதான சந்திகள், வீதிகள் மற்றும் பொது இடங்கள் எங்கிலும் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு வீதி வளைவுகள் அலங்காரப் பந்தல்கள் பதாகைகள் என்பனவும் அமைக்கப்பட்டுள்ளன. (33)

# துரோகிகளுக்கு தீனிபோட்டு பலியெடுக்கும் பேரினவாதிகள் செயலைப் பொறுக்க முடியாது

## -யாழ். தமிழீழ மாணவர் அமைப்பு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

**வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி மைதானத்தில் நடாத் தப்பட்ட அரக்கத்தனத்தை வன்மையாகக் கண்டிக்கின்றோம். ஒன்றும் அறியாத அப்பாவி இளைஞர்களைச் சுட்டுக் கொன்றவர்கள் யார்? யாழ்ப்பாணத்தையும், மட்டக்களப்பாக மாற்ற நினைக்கும் பேரினவாத சக்திகளின் நாடகம் நேற்று முன்தினம் பாடசாலை மைதானத்தில் அரங்கேறியிருக்கின்றது.**

சர்வதேசத்திற்கூடாக யுத்தநிறுத்தத்தைப் பெற்றுக்கொண்ட பேரினவாதம் யுத்தநிறுத்தம் என்றால் என்னவென்று தெரியாத பேரினவாதம் வெறியாட்டம் ஆடியுள்ளது.

தமிழினத்தை பல்வேறு கூறாக்கி விடுதலைப் புலிகளையும், மக்களையும் பிரித்து விடுதலை உணர்வுள்ளவர்களை அழிக்கும் வேலையை யுத்தகாலத்தைப்போல யுத்தநிறுத்த காலத்திலும் செய்ய நினைக்கும் சிறிலங்கா அரச பட்டாளத்தை எச்சரிக்கின்றோமென யாழ் மாவட்ட தமிமீழ மாணவர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

விடுதலைத் துரோகிளை முகாம்களுக்குள் வைத்து தீனிபோட்டு இப்படியான பலிபெடுப்பு வேலைகளைச் செய்யும் பேரினவாதிகளின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தங்களையே கொண்டு வழிப்படுத்த முடியாத தங்கள் உயிர்களையே பாதுகாத்துக்கொள்ள முடியாத தேசத்துரோகிகள் இராணுவ முகாம்களுக்குள் இருந்து கொண்டு செய்கின்ற அட்டகாசங்களை இனியும் பொறுக்கமுடியாது. வார்த்தைகளை மதித்து சரியான மரபிற்கேற்ற யுத்த நிறுத்தத்தை பேணிவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை சர்வதேசம் இன்று சரியாகப் புரிந்துள்ளது. அவர்களின் இந்தப் பேணுகையின் உயரிய தன்மைக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கில் நடைபெறும் இவ்வாறான அரக்கத்தனங்களை உலகிற்கு ஒட்டு மொத்தமாக வெளிக்காட்ட எல்லோரும் இன்றே தயாராகுவோம் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# வரவு- செலவுத் திட்டத்திலும் வாக்குறுதிகளுக்கு இடமில்லை

## -ரவி கருணாநாயக்க சாடல்

(கொழும்பு)

ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் துரித நிவாரணங்களை வழங்குவதாக கூறிய கூட்டமைப்பு அரசாங்கத்தினர் அவற்றை வரவு செலவுத் திட்டத்தில் மறுத்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு முன்னர் வழங்கிய வாக்குறுதிகளை சமமான உறுதிமொழிகள் பலவே இவ்வரவு செலவுத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஆட்சிக்கு வந்து மூன்று மாதங்களுக்குள் அரச ஊழியர்களின் சம்பளத்தை 70 வீதத்தால் அதிகரித்திருப்பதாக சனாதிபதி உட்பட்ட கூட்டமைப்பினர் தேர்தலுக்கு முன்னரும் பின்னரும் தெரிவித்த போதும், இம்முறை வரவுசெலவுத் திட்டத்தில் மிகக்குறைந்தளவிலான சம்பள அதிகரிப்பே கிடைத்துள்ளது. இதற்கென்று கூடிய நேர சேவையை வழங்க வேண்டியேற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேபோல சமுர்த்தி உதவி பெறும் சகலருக்கும் அதனைத் துரிதமாக வழங்குவதாகக் கூறிய உறுதிமொழிகளும் மீறப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டெங்கு நோயால் இவ்வருடம் 50 ஆயிரம் பேர் பாதிப்பு!

கடந்த 15 வருடங்களாக டெங்கு நோயின் தாக்கம் நாட்டில் இருந்து வருகின்ற போதும் இந்த வருடத்தில் மாத்திரம் சுமார் 50 ஆயிரம் பேர் வரை நாடளாவிய ரீதியில் டெங்கு நோயின் தாக்கத்துக்கு உள்ளாகிய்தாக சிறிலங்கா சுகாதார அமைச்சு தெரிவிக்கின்றது. பெரும்பாலும் டிசம்பர், ஜனவரி போன்ற மாதங்களில் டெங்கு நோயின் தாக்கம் நாட்டில் ஏற்படுவதுண்டு. எனினும் தற்சமயம் பாரியளவில் டெங்கு நோய் பரவல் ஏற்பட வாய்ப்புகள் இல்லை இருப்பினும் நுளம்பு ஒழிப்பு குப்பைகளை கொம்பொஸ்ட் செய்து புகைத்தல் போன்ற முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தாம் மேற்கொண்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

# விளக்கமறியல் நீடிப்பு

(கொழும்பு)

10 இலட்சம் ரூபா சமுர்த்தி நிதியை கடந்த வருடம் ரம்ழான் காலத்தில் துஸ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் பேரில் விளக்கமறியலில் இருந்து வரும் முன்னாள் கூட்டுறவு அமைச்சர் அப்துல் காதரை மேலும் எதிர்வரும் முதலாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் சரோஜினி குசலா வீரவர்த்தன உத்தரவிட்டார்.

இவர் மீதான குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைகளின் அறிக்கை சட்டமா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அதனை மையமாகக் கொண்டே வழக்குத் தொடரமுடியும் எனவும் குற்றப்புலனாய்வு துறையினர் மன்றில் அறிவித்தனர். இதனையடுத்து நீதவான் பிரதிவாதியின் சார்ப்பில் சமர்ப்பிக்கப்பட்ட பிணை மனுவை நிராகரித்தார்.

# மு.கா.வை காப்பாற்ற வேண்டுமானால் அரசுடன் இணைய முன்வர வேண்டும்

## அமைச்சர் பௌசி அழைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் அந்தக் கட்சித் தலைவர் அரசுடன் இணைந்து செயலாற்ற முன்வர வேண்டுமென சிறிலங்கா சுற்றுச் சூழல் பாதுகாப்பு அமைச்சர் ஏ.எச்.எம். பௌசி கூறியுள்ளார்.

தமது அரசாங்கத்தின் சரியான நிலைப்பாட்டில் ஆர்வம் கொண்டபலர் தமது கட்சியில் இணைந்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தக்கருத்துத் தொடர்பான முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஹசன் அலி கருத்துரைக்கையில் அமைச்சர் பௌசி தமது கட்சியை அழிப்பதில் எப்போதும் அரசாங்கத்துக்கு துணை நின்று வருகிறார். மர்ஹூம் அஸ்ரப் இருந்த காலத்திலும் பௌசி [illegible] காரணமாகவே அன்றைய அரசாங்கத்துக்கு 50 பக்க அறிக்கையை அவர் கொடுக்கவேண்டியிருந்தது. அதேநேரம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் இன்று பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இருந்து விலகுவதற்கும் பௌசியே காரணமாக அமைந்திருந்தார். எனவும் ஹசன்அலி தெரிவித்துள்ளார்.

# மரணதண்டனை மீண்டும் அமுலாவதற்கு சட்டத்தரணிகள் சங்கம் வரவேற்பு

(கொழும்பு)

சிறிலங்காவில் 30 வருடங்களின் பின்பு மீண்டும் மரண தண்டனை நிறைவேற்றப்படுமென அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்தை சட்டத்தரணிகள் சங்கம் வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் மொகமட் இஹ்ரம் பாரிய குற்றச்செயல்களுக்கு மரண தண்டனை வழங்குவதன் மூலம் தான் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். அரசாங்கத்தின் இந்தத் தீர்மானம் சட்டத்துறையினருக்கு மட்டுமன்றி பொது மக்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் இல்லையேல் பொதுமக்கள் சட்டத்தை தம் கையில் எடுக்க ஆயுதம் ஏந்த நேரிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜாதிகஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரோ இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில்;

---மரணதண்டனை குற்றச் செயல் களை கட்டுப்படுத்துவதற்குப் போதுமானது அல்ல. 3 நாட்களுக்கு முன்பு நீதிபதியின் பாது காப்பு விலக்கப்பட்டுள்ளது. இப்படி யான சூழ்நிலையில் மரணதண் டனை எப்படி குற்றச் செயல் களைக் கட்டுப்படுத்தும் என்றார்.

# கொலை, போதைவஸ்து விற்பனை, பாலியல் வல்லுறவு என்பனவற்றுக்கு மரணதண்டனை விதிக்கமுடிவு

(கொழும்பு)

நீதிபதி அம்பேபிட்டியவின் கொலை தொடர்பாக ஆராய்ந்த சிறிலங்கா சனாதிபதி தலைமையிலான உயர்குழு கொலை, போதை வஸ்து விற்பனை மற்றும் பாலியல் வல்லுறவு போன்ற குற்றங்களுக்கு நவம்பர் 20 முதல் மரணதண்டனையை அறிவித்துள்ளது. 30 வருடங்களிற்குப் பிறகு தற்போதே மீண்டும் மரண தண்டனை இவ்வாறான குற்றங்களிற்கு அமுலிற்கு வருகிறது.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் நடை பெற்ற பாதுகாப்பு தொடர்பான உயர் மட்ட மாநாட்டில் இதற்கான உத்தரவை சனாதிபதி பிறப்பித்துள்ளார். பொது மக்கள் பாதுகாப்பு, சட்டம் ஒழுங்கு அமைச்சின் அதிகாரிகளுடன் சனாதிபதி இந்த உயர் மட்ட மாநாட்டைக் கூட்டி மேல் நீதி மன்ற நீதிபதி சரத் அம்பேபிட் டியவின் கொலை தொடர்பாக ஆராய்ந்த பின்பு இந்த உத்தர வைப் பிறப்பித்தார்.

இந்த மாநாட்டில் சிறிலங்கா சனாதிபதியினால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் வருமாறு

1.குற்றப் புலனாய்வுத் துறை உடனடியாக மீளாய்வு செய்யப்பட்டு புனரமைக்கப்பட வேண்டும்.

2.குற்றவியல் சட்டத்தில் மேலதிக திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். இதற்கான அறிக்கையை 4 வார காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.

3. நீதிபதிகள் மற்றும் நீதிமன்ற பாதுகாப்பிற்காக விசேட பொலிஸ் பிரிவு ஏற்படுத்தப்பட்டு பொலிஸ்மா அதிபர் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரின் நேரடிக் கண்காணிப்பில் எதிர் வரும் 26ஆம் திகதி முதல் செயற்படவேண்டும்.

# 2005-வரவு செலவுத் திட்டம்

# ஜே.வி.பி. ஆதரவாளரை திருப்திப் படுத்துமா?

நாட்டில் பொதுத் தேர்தல் ஒன்று நடை பெற்று அதன் பெறுபேறுகளை அறிய இரு பிரிவினரோ அல்லது அதற்கு மேற்பட்டோரோ வித்தியாசமான அணுகுமுறையுடன் மிக ஆவலுடன் காத்திருப்பர். ஆனால் அங்கு வரவு செலவுத்திட்டம் ஒன்று சமர்ப் பிக்கப்படும் போது அதன் பெறுபேறுகளை அனைத்து மக்களும் ஒன்று சேர ஒரே எதிர் பார்ப்புடன் காத்திருப்பர் என்பது வெளிப் படை.

அதே போன்று பெரும் பான்மையா னோரின் எதிர்பார்ப்புக்களுக்கும் அபிலாசை களுக்கும் மத்தியில் சந்திரிகா ஜே.வி.பி கூட்டணியின் கன்னி வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது நிறைவேற இன்னும் ஓரிருவாரங்கள் எடுக்கும் என்ற போதும் நிதியமைச்சர் அறி வித்துள்ள திட்டங்களும் பொதுமக்களுக் கான சலுகைகள் என்பன பற்றியும் நோக்கு வோம்.

சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவுசெலவுத் திட்டத்தில் குறைகள் இருப்பினும் நாட்டின் வருமானம் கருதி பல பொருட்கள் மீதான வரியும், வருமான வரியும் அறிவிக்கப் பட்டுள்ளன. அரச பணிகளில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கான பிரசவகால விடுமுறை தினம் அதிகரிக்கப்பட்டுள்ளமை வரவேற்கத் தக்கதே. இன்றைய காலகட்டத்தில் தாய்மார் கள் எதிர்நோக்கியிருந்த பிரசவகால விடு முறை நாள் பிரச்சினை தலை தூக்கியே இருந்தன. ஆகவே இந்த அறிவிப்பு அவர் களுக்கு நன்மை அளிக்கும்.

அடுத்ததாக களியாட்ட விடுதிகள் சூதாட்டக்கழகங்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரி அறவீடும் ஏற்றுக்கொள்ளப்படலாம். ஆயினும் அரச ஊழியர்களின் வேலை நேரம் ஒரு மணித்தியாலம் அதிகரிக்கப் பட்டுள்ளமை பணியாளர்கள் யாவரினதும் கண்டனத்துக்குட்பட வேண்டியதாகும். இது தொடர்பாக அரச பணியாளர் சங்கங்கள் எந்தவிதமான கருத்தையும் தெரிவிக்காது உள்ளன. ஆயினும் தற்போது அரச ஊழியர் கள் சரியான ஒழுங்கிலும் உற்பத்தித் திறனைக் கருத்திற்கொண்டு பணியாற்றும் வகையிலும் இந்தத் திட்டம் சாதகமாக அமையுமா? அரச ஊழியர்கள் இதனைப் பின்பற்றுவார்களா? என்பதில் பிரச்சினையே. அத்துடன் சர்வதேச தொழிற்சங்க விதிமுறை களின்படி சிறிலங்கா அரசின் யோசனை குழறுபடியானதே.

இந்த வரவு செலவுத்திட்டத்தை வறிய மக்களும் , சாதாரணதரத்தினரும் பெரும் எதிர்பார்ப்புடன் காத்திருந்தனர். தற்போதைய வாழ்கைச்செலவு அதிகரிப்புக்கேற்ப அரச பணிகளில் ஈடுபட்டுள்ள மத்தியதர வகுப் பினர் தகுந்தசம்பள அதிகரிப்பை எதிர் பார்த்தே வந்தனர். அரசும் பதவியேற்கும் முன்பு அப்போதைய பொருளாதார நெருக் கடியில் 70 சதவீதசம்பள அதிகரிப்பை அறிவித்திருந்தது. ஆயினும் அது இந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வாக்களித்த அரச பணியாளர் களுக்காகவே உயர்த்தப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

அத்துடன் குறிப்பிட்ட சிற்றூழியர்களே சம்பள அதிகரிப்பில் 40 வீதத்தைப் பெறுவர் என்றும் அதிலும் ஒரு பகுதியை இந்த வரு டமும்.மற்றைய பாதியை அடுத்த வருடமும் பெறுவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அன்று அரசுக்கு பெரும் ஆதரவாக முண்டு கொடுத்து நிற்கும் கட்சி யான ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கம் அரச ஊழியர்களுக்கு 3000 ரூபா வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தது. ஆயி னும் தற்போது 2500 ரூபாவே வழங்கப்படும் என்ற அரசின் யோசனைக்குப் பதில் ஏதும் கூறாது இருக்கின்றது. நாட்டில் உள்ள மொத்த சேவையாளர்களில் 11 வீதத்தினரே இந்த சம்பள அதிகரிப்பைப் பெறுகின்றனர். அவ்வாறாயின் ஏனையோரின் நிலை என்ன? அண்மையில் தனியார் துறை ஊழியர்கள் அரச ஊழியர்களின் வேதனத்தை விட அதிகமாகப் பெறுவதாக தனியார் வேலைகொள்வோரின் அண்மைய அறிக் கையில் கூறப்படுகின்றது. அதன்படி அரச சேவையாளர்களையும் தனியார்துறை ஊழியர்களையும் ஒப்பிட முடியாது. ஆகவே இந்த வரவு செலவுத்திட்டத்தில் 89 வீதமான சேவையாளர்களுக்கு எதுவித நன்மையும் கிடையாது.

இந்த சம்பள அதிகரிப்பு , அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவுக்கு என்ன மாதிரி யாகப் பொருந்தும் என்பது பற்றியும் நிதியமைச்சர் அறிவிக்கவில்லை. வாழ்க்கைச் செலவோ விண்கல (ரொக்கட்) வேகத்தில் அதிகரிக்கின்றது. அதிகரித்து வரும் வட்டி வீதங்கள் பணவீக்கம் என்ப வற்றிற்கு ஏற்றவாறு இந்த வரவு செலவுத் திட்டம் அமையவில்லை. கடந்த ஒக்ரோபர் மாதம் வாழ்க்கைச் செலவுப்புள்ளி 14 வீதமா கக் காணப்பட்டது. அது கடந்த இரு வருடங்களில் என்றுமில்லாத வாறான ஒரு அதிகரிப்பாகும். அரசு பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு பல மில்லியன் புதிய கரன்சி ரூபாய்த்தாள்களை அச்சிட விருப்பதாகவும் தெரியவருகிறது. ஆயினும் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்காது விடில் இந்தச் சம்பள அதிகரிப்பும் வெறும் பொம்மை விளை யாட்டாகி விடுவதுடன் அதன் நன்மைகளும் கிடைக்காமல் போகும். நிதியமைச்சர் பணவீக்கம் பற்றி தனது உரையில் ஒரு போதும் குறிப்பிடாத நிலையில் பொருட் களின் விலை உயர்வுக்கு அது சாதகமாக அமைந்து விடும். அவர் தனது உரையில் மின்சார உபகரணங்கள் உட்பட பல ஆடம் பரப் பொருட்கள் மீது வரி வீதத்தை அறிவித் துள்ளார். இது வரவேற்கக் கூடியதே. எனினும் கடந்த பொதுத்தேர்தல் காலங்களில் அளித்த பாரிய வாக்குறுதிகள் எதுவும் இங்கு குறிப்பிடவில்லை என்பது எதிர்க் கட்சியினருக்கு மயக்கத்தை விளைவிக்கும். பொருளாதார ரீதியாக எடுக்கப்பட வேண் டிய சில நடவடிக்கைகள் பற்றி இங்கு குறிப்பிடப்பட்டிருப்பினும் அது எவ்வாறானது என்பது விளக்கமின்றிக்காணப்படுகிறது. பொருளாதார வளத்தை அதிகரிக்கும் நோக்கில் எந்த ஒரு பாரிய திட்டத்தையும் அரசு இங்கு முன்வைக்கவில்லை. ஆயினும் ஆயிரம் குளங்கள் புனரமைப்புத் தொடர் பான நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை அறி வித்திருக்கின்றார்கள். அதுவும் நீண்டகால அபிவிருத்தித் திட்டத்துடன் கூடிய ஆனால் நன்மைகளை அளிக்காத ஒரு திட்டமாகும்.

இந்த அரசு வருமான வரியை அதிகரித் துள்ளது. ஆயினும் வெளிநாட்டுக்கடன் பெறுவோர் இதனால் பாதிப்படையும் அபாயம் தோன்றுகின்றது.

அரசு இதன் மூலம் வருமானத்தைப் பெற முயற்சி செய்துள்ளது. இது பல வகையான வெளிநாட்டு உதவிகள் மீது விதிக்கப்படும் வட்டி வீதத்துக்கு மேல் அதிகமானதாகும்.

தற்போதைய வரவு செலவுத் திட்டம் ஜே.வி.பி.யினது வரலாற்று நிகழ்வு ஒன்றாகக் கூட கருதலாம். ஜே.வி.பி அரசு ஒன்றுக்கு தனது முதலாவது ஆதரவைத் தெரிவிக்கும் வரவு செலவுத் திட்டமாகக் கூட இதனை கருதலாம். இதன் மூலம் ஏனைய இடது சாரிக்கட்சிகளை அப்புறப்படுத்தி வைத்துள் ளது. காரணம் முன்னைய அரசு காலங்களில் உதாரணமாக என்.எம்.பெரேரா, கொல்வின் வாசுதேவ நாணயக்கார போன்றோர் கூட சில வேளைகளில் அரசு மீது எதிர்ப்பை காட்டியிருக்கலாம். ஆயினும் தற்போது ஜே.வி.பி. இந்த வரவுசெலவுத் திட்டம் பற்றி எந்த விதமான கருத்தையும் வெளிக்காட்டா மல் மௌனமாக இருப்பதுடன் தனது ஆதர வாளர்களுக்கும் இந்த வரவுசெலவுத் திட்டம் பற்றிய விளக்கம் ஒன்றையும் அளிக்கவிருக் கிறது.

ஜே.வி.பி அரசுக்குள் கூட்டணியமைத் திருப்பினும் தனது ஆதரவாளர்களுக்கு

**கேசர அபேவர்த்தன**
**(டெய்லிமிரா)**
**தமிழில்-வடிவேல்**

சந்திரிகா அரசிடமிருந்து பல நன்மைகளைப் பெற்றுத்தரும் வாக்குறுதிகளை அளித் துள்ளது. அதில் ஒன்று சம்பள அதிகரிப்பு அதற்காக பல வேலை நிறுத்தப் போராட்டங் களையும் நடத்தி வந்திருக்கின்றது. ஆயினும் நிதியமைச்சர் கண்துடைப்பு போன்ற சம்பள அதிகரிப்பை அறிவித்திருப்பதானது ஜே.வி.பி.க்கும், ஆதரவர்ளாகளுக்கும் சிறு மனக் கசப்பை ஏற்படுத்துவதாகவே இருக் கும். எனினும் ஜே.வி.பி. தலைவர்கள் இதுபற்றி தற்போதைக்கு மக்களை கிண்டிவிடாமல் சிறுவிளக்கம் ஒன்றின் மூலம் நியாயப் படுத்தும் நோக்கத்தை கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த 70களில் ஆட்சியாளர்களுடன் கூட்டுச் சேர்ந்திருந்த இடது சாரிகள் காலை வாரிவிட்டதனாலேயே சிறிலங்கா சுதந்திரக் கட்சி படுதோல்வியடைந்ததுடன் சிறிமாவோ வின் குடியுரிமையும் இழக்கப்பட்டது.

அந்த வகையில் தற்போது ஜே.வி.பி. என்ன நடவடிக்கைகளை கையாளப்போகி றது. ஜே.வி.பி.யை மேலும் நழுவவிடாமல் அரசு பாதுகாத்துக் கொள்ளுமா என்ப தெல்லாம் ஜே.வி.பி.யின் கைகளிலேயே தங்கியிருக்கின்றது.

இது தொடர்பாக ஜே.வி.பி. சார்பு தொழிற்சங்கவாதிகளும் வாய்திறக்காதுள் ளனர். உடனடியாக அவர்கள் செயலில் இறங்கவில்லையானால் அவர்கள் எதிர்பார்த் ததும் கிடைக்காதுவிடும் அடுத்ததாக இங்கு முக்கியமாகக் குறிப்பிடவேண்டிய விடய மானது; நிதியமைச்சர் வரவு செலவுத் திட்டம் பற்றி உரையாற்றிக் கொண்டிருக்கும்போது எதிர்க்கட்சியின் குருநாகல் எம்பியான றோஹித போகொல்லாகம நடத்திய அதிரடி அரசியல் நடவடிக்கையாகும் போகொல் லாகம (ஐ.தே.க) அண்மைக் காலங்களில் ரணிலுடன் சற்று முரண்பாட்டுடன் காணப் பட்டார். அதன் வெளிப்பாடாக இந்த வரவு செலவுத் திட்ட உரை நிகழும் நேரம் அரச தரப்பிற்கு மாறியதுடன் அவர் உடனடியாக பிரதி அமைச்சராகவும் பதவி ஏற்றுக் கொண் டார் அதற்கு முன்பு அவரது தந்தை அவரை அழைத்து கட்சிமாறும் எண்ணத்தை மாற்றும் படி புத்தி கூறியிருந்தார். எனினும் அதனை போகொல்லாகம நிராகரித்து விட இந்த செய்தியை ரணிலிடம் தந்தையார் கவலை யுடன் தெரிவித்துள்ளார். அதன்படி ஆளும் கட்சியில் போகொல்லாகம இணைந்ததை அமுனுகம அன்று சபையில் தெரிவித்தார். இது பற்றி பின்னர் ஏனைய ஐ.தே.க. எம்பிக்கள் ரணிலைச்சந்தித்து உரையாடியுள் ளனர். ஆக வரவுசெலவு திட்டம் சமர்ப்பித் ததுடன் அரசு இன்னும் ஒரு நாடகத்தையும் நடத்தி முடித்து விட்டுள்ளது. அதாவது இது வரை நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலம் கிடைக்காத நிலையில் அல்லாடிக் கொண்டிருந்த சந்திரிகா அரசாங்கம் போகொல்லாகமவின் கட்சித்தாவுதல் காரணமாக 6 மாதத்துக்கு முன்பிருந்த நிலை யை விட சற்று நிமிர்ந்து நிற்கிறது.

இந்தவகையில் சனாதிபதி சந்திரிகா புதிதாகப் பெற்ற பலத்தின் மூலம் நீண்ட காலத் திட்டத்தை நிறைவேற்றி விடுவார் போலவும் தோன்றுகிறது.

அதாவது தற்போதுள்ள ஐ.தே.கட்சியைச் சேர்ந்த சபாநாயகரை நீக்கிவிட்டு புதிய (தனது கட்சியைச் சேர்ந்த) சபாநாயகர் ஒருவரை நியமிப்பதுடன் அரசியலமைப்பை மாற்றி நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையையும் நீக்கிவிட திட்டமிடப்பட்ட மையாகும். இவையாவும் நிறைவேறும் போது சந்திரிகா பிரதமராகி தொடர்ந்தும் 60 வயதுக்குப் பின்னரும் ஆட்சியதிகாரத்தில் இருப்பார் எனினும் காலமே பதில் கூறும். O

# மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மாவீரர்தினத்தை முன்னிட்டு மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்விற்கான ஒழுங்கினை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன் செய்துள்ளார்.

இன்று 22 ஆம் திகதி காலை 11.00 மணிக்கு அடம்பன் மத்திய மகாவித்தியாலயத் தில் அடம்பன் பிரதேசப் பொறுப்பாளர் காஞ்சனன் தலைமையிலும் 23.11. காலை 11.00 மணிக்கு மடுப் பிரதேசத்தில் தட்சணா மருதமடுப் பாடசாலை யில் மடுப்பிரதேசப் பொறுப்பாளர் கள் இசைச் செல்வன், றஞ்சன் ஆகியோரின் தலைமையிலும் 24.11 அன்று காலை 11.00 மணிக்கு வெள்ளாங்குளம் பிரதேசத்தில் இலுப்பைக் கடவை பாடசாலையில் வெள்ளாங்குள பிரதேசப்பொறுப் பாளர் தலைமையிலும் இடம்பெற வுள்ளன.

இதே நாளில் மன்னார் நகர மண்டபத்தில் காலை 11.00 மணிக்கு மன்னார் நகரப்பொறுப் பாளர் முடியரசன் தலைமையிலும் மாவீ ரரின் பெற்றோரைக் கௌர விக்கும் நிகழ்வு இடம்பெறவுள் ளது. இதன்போது மாவீரர்களின் நினை வுச் சின்னமாக அவர்களுக்கு பொருள ஒன்றும் வழங்கப்படவுள் ளது. இந்நாளில் கலை நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன.

இதற்கான சகல ஏற்பாடு களையும் பிரதேச பொறுப்பாளர் கள் வெகுசன அமைப்புக்கள் என் பன இணைந்து மேற்கொண்டுள் ளனர். (மி)

## ஞாயிற்றுக்கிழமையிலும் எரிபொருள் விநியோகம்

(முல்லை)

முல்லை மாவட்டத்தில் மாங் குளத்திலும் கரைதுறைப்பற்று ஆகிய இடங்களில் அமைந்துள்ள எரி பொருளநிலையங்களை ஞாயிற் றுக் கிழமைகளிலும் எரிபொருள் விநியோகத்திற்காக திறந்து வைக் கப்படவேண்டுமென அதற்குப பொறுப்பானவர்களை முல்லை மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா-சுகுமார் பணித்துள்ளார். அதற்கமைவாகச் செயல்படுமாறும் கேட்டுக் கொண்டார். (20)

# விவசாயிகளின் வாழ்க்கைத் தர மேம்பாட்டுக்கு உள்ளீடுகள் வழங்கல்

(மல்லாவி)

துணுக்காய் பிரதேசத்தில் 2004, 2005 ஆம் ஆண்டு உலக உணவு விவசாய தாபனத்தின் நிதியுதவியுடன் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாய திணைக்களமும் இணைந்து 120 வறிய நிலையில் உள்ள விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த விதை உற்பத்தி திட்டமான உள்ளீடுகளை வழங்கியுள்ளன.

இவ்விவசாயிகளிற்கான பயிற்சி வகுப்பு பிரதேச ரீதியாக கடந்த 18.11.2004 அன்று காலை 9.00 மணிக்கு துணுக்காய் கமநலசேவை நிலையத்தில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பிரதேச இணைப்பாளர் கு.ரசிக்குமார் தலைமையில் நடைபெற்றது. அன்றைய நிகழ்வில் மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் மோகனதாசன், விவசாயப் போதனாசிரியர் திருமதி கு.சிவபாலன், உணவு விவசாய திணைக்கள மாவட்ட இணைப்பாளர் தயா ஆகியோர் கருத்துரையினை வழங்கினர் மற்றும் பாடவிதான உத்தியோகஸ்த்தரினரால் பயிற்சிகள் வழங்கப்பட்டது. பயிற்சிகளில் 75 இற்கு மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டனர். தொடர்ந்தும் பயிற்சிகள் கிராம ரீதியாக நடத்தப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (24)

# கடந்த வாரத்தில்

## 11.11.2004-17.11.2004


**11**

*.பாகிஸ்தான் கடற்பகுதியில் சட்ட விரோதமாக மீன்பிடித்ததாக 29 இந்திய மீனவர்களை பாகிஸ்தான் கடலோரக் காவல் படையினர் கைது செய்தனர்.



*.பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத் மரணம்.

*.காஞ்சிபுர சங்கர மடத்தின் முன்னாள் பணியாளர் சங்கரராமன் கடந்த செப்ரெம்பர் மாதம் கொலை செய்யப்பட்டார். இதன் பின்னர் பலர் கொடுத்த வாக்கு மூலத்தினடிப்படையில் காஞ்சிபுரம் சங்கர மட ஆச்சாரியாரான ஜெயேந்திரரை தமிழகப் பொலிசார் கைதுசெய்தனர்.



ஜெயேந்திரர் கைது

**12**

*.கிழக்கு இந்தோனேசிய நகரான கலபாஹிடையில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 14 பேர் பலியானதுடன் அனேகமானோர் காயமடைந்தனர்.

*.மத்திய சீனாவிலுள்ள கரிச் சுரங்கமொன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 33 ஊழியர்கள் பலி.

*.பிலிப்பைன்ஸின் மத்தியமாகாண குயிலோனில் பிகோல் பிராந்திய லிகாஸ்பி நகரிலிருந்து மணிலாவை நோக்கிப் புறப்பட்ட ரயில் தடம் புரண்டதில் 12 பேர் பலியாகியதுடன் 115 பேர் காயமடைந்தனர்.



விபத்தில் காயமடைந்த சிறுவன்

*.பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்தின் இறுதிக் கிரியைகள் எகிப்திய தலைநகர் கெய்ரோவிலும் பின்னர் பலஸ்தீனத்தின் ரமளாவிலும் இடம்பெற்றன.



இறுதிக்கிரியையில்

*.அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் கொலின் பவல் பதவியினை இராஜினாமாச் செய்துள்ளார்.



கொலின் பவல்

**13**

*.அமெரிக்க சனாதிபதி புஷ் ஷும் இங்கிலாந்து பிரதமர் ரொனிபிளேயரும் வெள்ளை மாளிகையில் சந்தித்துப் பேசினர் இதன்போது பலஸ்தீனத்தில் ஏற்பட்டுள்ள நிலைமைகள் குறித்தும் அரபாத்தின் மறைவு குறித்தும் உரையாடியதோடு பலஸ்தீன நாடு உருவாக இருவரும் உறுதியளித்துள்ளனர்.

*.புதுடில்லியிலிருந்து ரம்ழான் நிகழ்விற்கு பீகார் தலைநகர் பட்னா செல்ல விருந்த "ஜான்சாதரன் எக்ஸ்பிரஸ்" ரயிலில் பயணிகள் நெருசல் காரணமாக 5 பெண்கள் பலியாகினர். 10 பேர் படுகாயமடைந்து ஆபத்தான நிலையிலிருந்தனர்.



விபத்து நடந்த இடம்

**14**

*.தாய்லாந்தில் முஸ்லிம்கள் பெருமளவு வாழும் தென்பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவமொன்றில் பௌத்த துறவி ஒருவர் கொல்லப்பட்டதுடன் 7 பேர் காயமடைந்தனர்.

*.யசீர் அரபாத்தின் மறைவிற்கு இரங்கல் தெரிவிக்கும் நிகழ்வில் தற்காலிக அதிபர் முகமது அப்பாஸைக் குறிவைத்து நடத்திய தாக்குதலில் இரண்டு மெய்ப்பாதுகாவலர்கள் பலியானதுடன் 5 பொதுமக்கள் காயமடைந்தனர்.



சம்பவ இடத்தில்

*.ஈராக்கின் மொசூல் நகருக் கண்மையில் எய்த்அல்ஜசீரா என்னுமிடத்தில் தீவிரவாத தாக்குதலுக்குட்பட்டு எரிபொருள் களஞ்சியசாலை தீப்பற்றி எரிந்துள்ளது.



எரிபொருட்களஞ்சியம்

*.நமீபியாவில் அதிபர் தேர்தலுக்கான வாக்குப்பதிவு இடம்பெற்றது.

*.புஷ்ஷின் அமைச்சரவையிலுள்ள கல்வி அமைச்சர் ராட்யெஜ் வேளான் துறையமைச்சர் ஆன்வெனிமேன் மற்றும் ஸ்பென்சர் ஆப்ரகாம் ஆகியோர் பதவியினை இராஜினாமா செய்துள்ளனர்.

*.அவுஸ்திரேலியாவின் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்தில் சாரதி இருவர் பலியாகினர். 5 பேர் காய மடைந்தனர்.

*.ஈராக்கிய தலைநகர் அருகே பகுபா பிரதேசத்தில் பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்திய தீவிர வாதிகளுக்கெதிராக அமெரிக்கப் படையின் விமானங்கள் நடத்திய குண்டுத்தாக்குதலில் 20 தீவிரவாதிகள் பலி.

**16**

* பிரேசில் நாட்டிலுள்ள பராகுவே துறைமுகத்தினருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த "விக்குனா" என்ற கப்பல் வெடித்து நீரில் மூழ்கியதில் 20 பேர் காயமடைந்ததுடன் 4 பேர் காணாமற் போயுள்ளனர்.

*

நேபாளத்தின்மேற்கு மாவட்டமான ஹைலாலியிலுள்ள பஹ்வன் புர் கிராமத்திலும் கிருஷ்ண பஹிர் எனும் இடத்திலும் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் 30 மாவோயிஸ்ட்டுக்களும் 11 பாதுகாப்புப் படையினரும் பலியாகினர்.

*

கிழக்கு அவுஸ்திரேலியாவில் வட பிரிஸ் பேணிலிருந்து 250 மைல் தொலைவில் கடுகதி ரயில் ஒன்று தடம் புரண்டதில் 120 இற்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

**17**

* ஒலியை விட 10 மடங்குவேகமாகப் பறக்கக் கூடிய ஆளில்லாத ஸ்க்ராம் ஜெட்விமானத்தை அமெரிக்காவின் நாஸாநிறுவனம் வெற்றிகரமாக பரிசோதனைசெய்தது.

*

பிர்தமர் மன்மோகன்சிங் முதல் தடவையாக காஷ்மீர் மாநிலத்திற்கு விஜயம் செய்தார்.

*

அமெரிக்கவெளியுறவுத் துறைச் செயலராக கொண்டலிஸாரைஸ் பதவியேற்பு

# தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு புதுக்குடியிருப்பில் சிரமதானப் பணி

(புதுக்குடியிருப்பு)

மாவீரர் தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சிரமதானப் பணிகள் இடம் பெற்றுவருகின்றன.

அந்த வகையில் புதுக்குடியிருப்பு அரசினர் வைத்திய சாலையில் குப்பையும்,மரம், செடிகள் நிறைந்து சுகாதார சீர்கேடாக இருந்த பகுதியை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா அவர்களின் தலைமையில், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர்பணிமனை ஊழியர்கள், புதுக்குடியிருப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க பொது முகாமையாளர், ஊழியர்கள், கமநலசேவை நிலையப் பணியாளர்கள், புதுக்குடியிருப்பு வைத்தியசாலைத் தொண்டர்கள், தமிழீழ சுகாதார சேவை ஊழியர்கள் இணைந்து சிரமதானம் மூலம் சீர் செய்தனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு வைத்தியசாலையின் முன்பக்கத்தினை புதுக்குடியிருப்பு காவல் துறையினரும் , வாடகைக்கார் மற்றும் முச்சக்கரவண்டி உரிமையாளர்களும் இணைந்து சிரமதானமூலம் சீர்செய்தனர். (08)



தமிழீழ மாவீரர் தினத்தை முன்னிட்டு நேற்று கிளி.முச்சக்கர வண்டி உரிமையாளர் சங்கத்தினர் கிளி.மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதான நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

கொட்டும் மழையிலும் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 1.00 மணிவரை நடைபெற்ற இச் சிரமதான நிகழ்வில் மேற்படி சங்க உறுப்பினர்கள் 65 பேர் வரையில் கலந்து கொண்டனர் அத்துடன் போராளிகளும் மேற்படிசிரமதானப்பணியினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. படம்-(சோதி)

# சுவர் இடிந்தது

(மல்லாவி)

முல்லை மாவட்ட பாண்டியன் குளம் பிரதேசத்தில் பெய்துவரும் கனத்த மழையினால் கரும் புள்ளியான் கிராமத்து இருதய நாதர்முன்பள்ளியின் மண்சுவர்கள் இடிந்து விழுந்துள்ளன. கடந்த 15.11.2004 இரவு பெய்த கன மழையினால் மழை நீர் உட்புகுந்ததாலும் சுவர்கள் இடிந்து விழுந்துள்ளமையால் தளபாடங்கள் சேதத்துக்கு உள்ளாகின. (24)

# வெள்ளிவிழாக் கொண்டாட்டம்

(மன்னார்)

மன்னார் தோட்ட வெளிக்கிராமத்தில் யோசப்வாஸ் மாதிரிவீட்டுத் திட்டத்தில் யேசுசபை அகதிகள் நிவாரணப் பணியகம் ஆரம்பித்து 25 வருடங்கள் பூர்த்தியாகிய நிலையில் வெள்ளி விழாவினைக் கொண்டாடும் முகமாக வெள்ளிக்கிழமை 3.00 மணியளவில் வைபவமொன்று இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு மேற்படி யேசுசபை அகதிகள் பணியகத்தின் மாவட்ட இணைப்பாளர் தலைமை தாங்கினார்.

இதன்போது இடம்பெயர்ந்த 300 வறிய பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைப்புத்தகங்களும் அப்பியாசக் கொப்பிகளும் வழங்கப்பட்டன. (மி)

# முறிகண்டியில் நடமாடும் சேவை

(முல்லை)

நிர்வாக சேவையினரால் திருமுறிகண்டிக் கிராமத்தில் பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு நடமாடும் சேவை எதிர்வரும் 24ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

திருமுறிகண்டிப் பாடசாலையில் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது எனவும் முல்லை மாவட்டத்தில் இதுவரை இப்பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் இந்த நடமாடும் சேவையினைப் பயன்படுத்தி பலன் பெறுமாறு முல்லை மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பாளர் செ.முரளி தெரிவித்தார்.

இம்மாவட்ட மக்களின் நன்மைகருதியே இந்த நடமாடும் சேவையை ஒழுங்குபடுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார். (20)

# முல்லைமாவட்ட தமிழீழ சிரமதானம்

பூநகரி சாமிப்புலம் அ.த.க. பாடசாலை முதல்வர் நித்தியானந்தம் தலைமையில் ஆசிரியர், மாணவர்கள், பொதுமக்கள், பொதுஅமைப்புக்கள் என அனைவரும் அணிதிரண்டு அப்பகுதிப் பாடசாலை வளாகத்தையும்-வீதிகளையும் சிரமதானப் பணிமூலம் சீர் செய்தனர். தொடர்ந்து பனம் விதைகள் நாட்டல் நிகழ்வும் இடம் பெற்றது. இந்நிகழ்வில் பொது அமைப்புக்கள் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டனர் இதே போன்ற சிரமதானம் பூநகரி முட்கொம்பன் கிராமத்திலும் இடம்பெற்றது. இப்பணியை போராளிகள் ,பொதுமக்கள், பொது அமைப்புக்கள் மாணவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொண்டனர்.

# பெப்ரவரி முதல் சேவையில் இணைப்பு

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலைவழங்கும் திட்டத்திற்கு அமையத் தெரிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் எதிர்வரும் 2005 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் அரசசேவையில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனரென பிரதி நிதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இரண்டாவது வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதி நிதியமைச்சர் ரஞ்சித் ஷியம்பலப்பிட்டிய இவ்வாறு கூறினார்.

# நாட்டில் சட்டமும் அமைதியும் சீர்குலைந்துள்ளன

## -ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

நாட்டின் சட்டமும் அமைதியும் மிகவும் மோசமான முறையில் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது. நாட்டில் சட்டத்திற்கும் அமைதிக்கும் பதிலாக தனிப்பட்ட விரோதங்களும் கொலை வெறியுமே புரையோடிப் போயுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் நாட்டிலுள்ள நீதிபதிகள் தமது வழக்குகள் தொடர்பாக சுயாதீன தீர்மானங்களை எடுக்க முடியாத சூழ்நிலையொன்று உருவாகியுள்ளமை வருந்தத்தக்க விடயமென்றும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் சனாதிபதி உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை மேல் நீதிமன்ற நீதிபதி கொலை செய்யப்பட்டமைக்கு ஐக்கிய தேசியக் கட்சி அனுதாபத்தை தெரிவித்துள்ளது.

# ஒரு கொடியில் பூத்த இரு மலர்களின் நினைவில்...

**10ஆம் ஆண்டில்...**

ஜனனம் 21 - 08 - 1976




வீரமரணம் 31 - 01 - 1994

**2ஆம் லெப். நெடியோன்**

(கோவிந்தன் - கேதீஸ்வரன்)

**05ஆம் ஆண்டில்...**

ஜனனம் 12 - 03 - 1978



வீரமரணம் 22 - 11 - 1999

**2ஆம் லெப். நிதர்சன்**

(கோவிந்தன் - சோதீஸ்வரன்)

**வீரமைந்தர்களே,**

அன்னை மண்காத்திட அண்ணன் வழி சென்ற அண்ணாக்கள் - தேச விடுதலைக்காய்
அண்ணனும் தம்பியுமாய் - அண்ணன் அணிசேர்ந்து - மாவீரர்
வரிசையில் இணைந்து விட்ட-எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே! -மீளாத்
துயிலில் உறங்கிக் கொண்டிருந்தாலும் உங்கள் பிரிவால் துயருறும்

கோ. மதிவதனி
போ.க.பி.
புளியங்குளம்.

குடும்பத்தினர்
முத்தையன்கட்டு
வலதுகரை.

(5288)

# விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பொலநறுவை புகையிரத நிலையத்திற்கு அருகில் இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

போர்நிறுத்த உடன்படிக்கை அமுலுக்கு வந்த பின்னர் இராணுவ புல னாய்வுப் பிரிவைச் சேர்ந்த 8 பேர் கொலை செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர்தயாரட்ண தெரிவித்துள்ளார். உயிரிழந்த இருவருக்கும் உள்ள தொடர்புகள் பற்றி இதுவரை எந்தவித தகவல்களும் கிடைக்கவில்லையென இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

# பயணியர் பேருந்துப்பணி

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## கிளிநொச்சி - புளியங்குளம்

மேற்படி பேருந்துப்பணி 26.11.2004ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்குக்கு அமைவாக நடைபெறும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:-

**கிளிநொச்சி - புளியங்குளம்**

| கிளிநொச்சி | முருகண்டி | மாங்குளம் | புளியங்குளம் |
|---|---|---|---|
| காலை 05.30 | 05.50 - 06.00 | 06.40 | 07.15 |

**புளியங்குளம் - கிளிநொச்சி**

| புளியங்குளம் | மாங்குளம் | முருகண்டி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| காலை 07.45 | 08.20 | 09.00 - 09.10 | 09.30 |

முகாமையாளர், பேருந்துப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
கிளிநொச்சி.

# பேருந்துப்பணி

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## பெரியமடு - உயிலங்குளம்

மேற்படி பேருந்துப்பணி பாடசாலை மாணவர், ஆசிரியர் நலன் கருதி26.11.2004ஆம் நாளிலிருந்து பின்வரும் நேர ஒழுங்குக்கு அமைவாக நடைபெறும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நேர ஒழுங்கு:-

**பெரியமடு- உயிலங்குளம்**

| பெரியமடு | பெரியமடுமகாவித்தியாலயம் | சன்னார் | பள்ளமடு | விடத்தல்தீவு | ஆண்டாங்குளம் | உயிலங்குளம் |
|---|---|---|---|---|---|---|
| காலை 07.30 | 08.00 | 08.15 | 08.45 | 08.50 | 09.15 | 09.30 |

**உயிலங்குளம் - பெரியமடு**

| உயிலங்குளம் | ஆண்டாங்குளம் | விடத்தல்தீவு | பள்ளமடு | சன்னார் | பெரியமடுமகாவித்தியாலயம் | பெரியமடு |
|---|---|---|---|---|---|---|
| பகல் - 12.45 | 01.00 | 01.25 | 01.30 | 02.00 | 02.15 | 02.45 |

முகாமையாளர்,
பேருந்துப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
கிளிநொச்சி.

(சி-10628)

# ஜெயேந்திரர் தன்னை பிணையில் விடுவிக்கக் கோரி சமர்ப்பித்த மனு

# சென்னை உயர் நீதிமன்றத்தால் நிராகரிப்பு

## - குற்றச்சாட்டுக்கள் வலுவாக உள்ளதாக நீதிபதி தெரிவிப்பு

(சென்னை)

கொலை வழக்கில் கைதான காஞ்சி ஜெயேந்திரரை பிணையில் விடுவிக்கக் கோரும் மனுவை சென்னை உயர் நீதிமன்றம் சனிக்கிழமை மாலை தள்ளுபடி செய்தது.

ஜெயேந்திரரை தற்போது பிணையில் விடுவிக்க இயலாது என்று நீதிபதி ஆர். பாலசுப்பிரமணியன் தனது தீர்ப்பில் கூறியுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் 3 ஆம் திகதி காஞ்சிபுரம் வரதராஜப் பெருமாள் கோயிலின் மேலாளர் சங்கரராமன், கோயில் வளாகத்திலேயே வெட்டிக்கொலை செய்யப்பட்டார். அவரைக் கொலை செய்ய சதி செய்ததாக நவம்பர் 11 ஆம் திகதி இரவு காஞ்சி ஜெயேந்திரர் கைது செய்யப்பட்டார்.

அவரைபிணையில் விடுவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை தள்ளுபடி செய்த நீதிபதி தனது தீர்ப்பில் கூறியிருப்பதாவது;

ஆன்மீகவாதிஒருவரைதீபா வளி பண்டிகையன்று கைதுசெய்தது லட்சக்கணக்கான இந்தியர்களின் மனதில் உணர்ச்சிக் கொந்தளிப்பை நிச்சயமாக ஏற்படுத்தியிருக்கும். அதன்காரணமாகஅவர்களிடையே உணர்வு பூர்வமான வெளிப்பாடு ஏற்பட்டதில் வியப்பில்லை.

அதீதமான உணர்ச்சிகள் மற்றும் பாரபட்சத்துக்கு ஆளாகாமல் நீதிபதிகள் தீர்ப்பளிக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

எனவே சட்டவிதிகளின் படியே ஜெயேந்திரரின் மனுவில்தீர்ப்பளிக்கிறேன். இவ் வழக்கில் 3 ஆதாரங்களைபொலிசார் சமர்ப்பித்துள்ளனர். சங்கரராமன் கொலைக்கு முன்பாகவும். கொலைக்குப்பிறகும் கொலையாளிகளுடன் ஜெயேந்திரர் செல்லிடத் தொலைபேசியில் பேசினார். காஞ்சி சங்கரமடத்தின் வங்கிக்கணக்கில் இருந்து பணம் எடுத்து கொலையாளிகளுக்குபணம் தரப்பட்டுள்ளது அந்தப்பணம் கொலையாளிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. கொலை செய்யப்பட்ட சங்கரராமன், ஜெயேந்திரரை மிரட்டி எழுதிய கடிதம் கொலையாளிகளிடம் இருந்து கைப்பற்றப் பட்டுள்ளது.

இதையடுத்து வழக்குத் தொடர்பான பொலிஸாரின் வழக்கு ஆவணத்தை வரவழைத்துப் பார்த்தேன். கொலையாளிகள் பலர் ஜெயேந்திரரை இக் கொலையில் தொடர்புபடுத்தி வாக்குமூலம் அளித்திருப்பது அந்த வழக்கு ஆவணத்தில் இருந்து தெரிகிறது. ஜெயேந்திரர் தான் இக்கொலைக்கு சதி செய்தார் என்றும் சங்கரராமனைக் கொலை செய்ய அவர் பணம் கொடுத்தார் என்றும் மற்ற எதிரிகள் கூறியுள்ளனர்.

எனவே ஜெயேந்திரருக்கு எதிராக அடிப்படை ஆதாரங்கள் இருப்பது ஆதரங்களில் இருந்து தெரியவருகிறது.

ஜெயேந்திரரைக் கைது செய்த போது, அரசமைப்புச் சட்டத்தின் 22 (1) பிரிவு மீறப்பட்டுள்ளது. கைது நடவடிக்கையின்போது பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படவில்லை என்று ஜெயேந்திரரின் வழக்கறிஞர் ராம்ஜேட்மலானி கூறினார். இதை மறுக்கும் வகையில் பொலிஸ் தரப்பில் ஒளிநாடா நீதிமன்றத்தில் காட்டப்பட்டது. ஆந்திர மாநிலம் மஹபூப்நகரில் ஜெயேந்திரரைக் கைது செய்தபோது கைதுக்கான காரணங்களை அவரிடம் பொலிசார் கூறியது அந்த ஒளிநாடாவில் தெரிகிறது என்றும் தெரிவித்தார்.

# இந்தியாவுடன் பேச்சுவார்த்தை நடத்த நாம் தயார்

## - பாகிஸ்தான் அதிபர் முஷாரப்

காஷ்மீர் உட்பட இந்தியாவுடன் அனைத்து இருதரப்பு பிரச்சினைகளையும் தீர்க்க பாதிவழிவரை முன்னே வந்து சந்திப்பு நடத்த பாகிஸ்தான் தயாராக உள்ளதாக பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ்முஷாரப் தெரிவித்துள்ளார். லாகூரில் தெற்காசிய தகவல் தொடர்பு ஊடகங்கள் குறித்து மாநாட்டைத்தொடக்கி வைத்துப்பேசிய முஷாரப் இந்தியா பாகிஸ் தானிடையே காஷ்மீர் முக்கிய பிரச்சினையாக இருந்ததென்றும் கூறியுள்ளார்.

# சேதுசமுத்திரத் திட்டத்திற்கு தடைவிதிக்க முடியாது

## சென்னை உயர் நீதிமன்று உத்தரவு

சேது சமுத்திரத் திட்டத்திற்கு தடை விதிக்க முடியாது என்று உயர் நீதிமன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

சேது சமுத்திரத் திட்டத்திற்கு தடைவிதிக்கக் கோரி சென்னை சைதாப்பேட்டையைச் சேர்ந்த ஓ.பெர்னாண்டஸ் சென்னை உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கில் கீழ்க் கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

சேதுசமுத்திரத்திட்டத்தை தொடங்க முன் இது பற்றி மாசு கட்டுப்பாட்டு வாரியம் பொது மக்கள் கருத்துகளை தூத்துக்குடி ராமநாதபுரம் உட்பட பல்வேறு இடங்களில் கேட்டு வருகின்றது. தற்போது அமைக்கப்பட்ட பொது மக்கள் கருத்து கேட்கும் கமிட்டியில் உள்ள உறுப்பினர்களில் தகுதி இல்லாதவர்கள் உள்ளனர். அதில் நிபுனர்கள் இல்லை.

எனவே இதுவரை பொது மக்கள் கருத்து கேட்டு இருந்தால் அதை ரத்து செய்ய வேண்டும். கமிட்டியில் தகுதியானவர்களை நியமனம் செய்து பொதுமக்கள் கருத்துக்களை கேட்க வேண்டும்.

இது தவிர சேதுசமுத்திரத் திட்டம் பற்றி முழு அறிக்கையையும் வெளியிடவில்லை. இதுதவிர புதிய குழுவை பொதுமக்கள் கருத்து கேட்க அமைக்க வேண்டும். இவ்வாறு அவர் வழக்கில் கூறி யுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைக்கு வரும்போது மனுதார வக்கீல் பிரகாசம் இந்த வழக்கில் தடை விதிக்கவேண்டும் என்று கூறினார்.

இதற்கு மத்திய அரசு தரப்பில் ஆஜரான மூத்த வக்கீல்கள் வி.டி. கோபாலன், பி.வில்சன் ஆகியோர் பொதுமக்கள் நலன் கருதிகொண்டு வரப்பட்ட திட்டம் இதற்குத் தடை விதிக்கக் கூடாது என்று கூறினர். இந்தவழக்கை நீதிபதிகள் கற்பக விநாயகம், தணிகாசலம் ஆகியோர் விசாரித்து இதில் எந்த தடை உத்தரவும் பிறப்பிக்க முடியாது இதில் அரசு பதில் மனு தாக்கல் செய்ய உத்தரவிடுகிறோம் விசாரணையை அடுத்த வாரம் தள்ளி வைக்கிறோம் என்று உத்தரவிட்டனர்.

# பாக்ஸ்தானுடன் பேச்சுக்கள் நடத்த நாம் மிகத் தீவ்ரமாக உள்ளோம்

## இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்

பாகிஸ்தானுடனான அமைதிப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல இந்தியா மிகத் தீவிரமாக உள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார்.

மன்மோகன்சிங் மேலும் தெரிவிக்கையில்;

ஜம்முகாஷ்மீரில் மாநிலத்திலிருந்து துருப்புக்கள் குறைக்கப்பட்டது குறித்து பாகிஸ்தான் அதிபர் முஷாரப் கூறியுள்ளார். கருத்துக்கள் முழுமையாக பரிசீலிக்கப்படவேண்டுமென்று கூறினார். மேலும் நாளை புதுடில்லிக்கு மறுதினம் தான் பாகிஸ்தான் பிரதம மந்திரி வருகை தரும் வேளையில் நிலுவையிலுள்ள அனைத்து விடயங்களையும் இந்தியா நம்பிக்கையோடு விவாதிக்குமென்றார்.

முப்படைகள் சிறப்பு அதிகார சட்டங்கள் குறித்து அமைக்கப்பட்டுள்ள மத்திய பரிசீலனைக் கமிட்டி தனது அறிக்கை செய்வதற்கான காலவரையறையை திருத்துமாறு நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த அப்புன்வால் லூக் பிரதிநிதிக் குழுவினர் கேட்டுக் கொண்டதாக பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்தார்.

# பாகிஸ்தான் விருப்பப்படி எல்லாம் ஆட முடியாது

## இந்திய அமைச்சர் ஶ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால்

காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க பாகிஸ்தான் விருப்பப்படி எல்லாம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்க முடியாது என்று மத்திய உள்துறை இணையமைச்சர் ஶ்ரீபிரகாஷ் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

காஷ்மீர் பிரச்சினையை தீர்க்க பாகிஸ்தானின் விருப்பப்படி எல்லாம் இந்தியா ஒவ்வொரு நடவடிக்கையையும் எடுத்துக் கொண்டிருக்க முடியாது. இப்பிரச்சினையில் இந்தியா எடுக்கும் எல்லா நடவடிக்கைகளையும் பாகிஸ்தான் பாராட்ட வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. காஷ்மீர் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாட்டை உலக நாடுகள் பாராட்டுகின்றன. காஷ்மீரில்அமைதி ஏற்பட்டால், எல்லைக்கு அப்பால் இருக்கும் மக்களும் (பாகிஸ்தான்) வளம் பெறுவார்கள்.

இந்திய-நேபாள எல்லையை பலப்படுத்த அடுத்தாண்டுக்குள் கூடுதாலக 22 சிறப்பு பாதுகாப்புப் படை (எஸ்.எஸ்.பி)பட்டாலியன்களை உருவாக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. உத்தரப் பிரதேசம் முதல் சிக்கிம் வரையிலான இந்திய- நேபாள எல்லையில் ('செக் போஸ்ட்) களின்' எண்ணிக்கையை அதிகரிக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது பத்து கிலோ மீற்றருக்கு ஒரு செக்போஸ்ட் இருக்கின்றது இது ஐந்து கிலோமீற்றருக்கு ஒன்று என்று மாற்றப்படும்.

நேபாளத்தில் அடுத்த பத்தாண்டுகளில் நிலைமை மோசமாகலாம். அச்சமயம் இந்தியாவிற்குள் ஏற்படக்கூடிய ஊடுருவலைத்தடுக்க பாதுகாப்புப் படைகள் அதிகம் இருக்க வேண்டியது அவசியம். நேபாளத்தில் தாக்குதல் நடத்தும் மாவோஸ்ட்டுகள் கைது நடவடிக்கையில் இருந்து தப்பிக்க இந்திய எல்லைக்குள் ஊடுருவுகின்றனர். இதனால் எல்லைப் பகுதி மக்கள் பீதி அடைகின்றனர். மத்திய துணை இராணுவத்திற்குத் தரமான போர் பயிற்சி அளிக்க உத்தரப்பிரதேசத்தில் புதிய பயிற்சி மையம் அமைக்கப்படும். சிறப்பு பாதுகாப்புப் படைவீரர்கள் மட்டுமன்றி, மத்திய அரசின் எல்லா பாதுகாப்புபடைகளுக்கும் இங்கு கெரில்லா போர்பயிற்சி கற்பிற்கப்படும் மையம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. அநேகமாக கான்பூர் தெகாத்தில் அமைக்கப்படக்கூடும். இவ்வாறு ஜெய்ஸ்வால் கூறினார்.

## குற்றச்சாட்டு

'ஜெயேந்திரர் கைது விவகாரத்தில் பா.ஜ.சட்டத்தையும், மதச்சார்பற்ற கொள்கையையும் மதிக்காமல் செயற்படுகிறது. சட்டத்தின் முன் சங்கராச்சாரியாரும் சாதாரண குடிமகனும் சமமே' என்று இடதுசாரிக்கட்சிகள் தெரிவித்துள்ளன.

கொலை வழக்கில் கைதான காஞ்சி ஜெயேந்திரரை விடுவிக்க வற்புறுத்தி மூன்று நாள் தொடர் உண்ணாவிரதம் மற்றும் மறியல் போராட்டத்தை பா.ஜ. நடத்திவருகிறது.இதுபற்றி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நிறைவேற்றுக்குழு கருத்துக் கூறுகையிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.


## கண்ணீர் அஞ்சலி

************************************



மண்ணில் 22 ◻ 01 ◻ 1980

விண்ணில் 20 ◻ 11 ◻ 2004

அமரர் பொன்னுத்துரை-தயாபரன்

(செல்வாநகர் கிளிநொச்சி)

நண்பனே!
சிரித்த வண்ணம் எம்மை வலம் வந்தாயே
சட்டென சாவை அணைத்துக்கொள்ளவா?
எம்முடன் பணியாற்றி
எல்லோருக்கும் உதவி செய்து
உன் பணியையும் ஒழுங்காகச் செய்தாயே.....
இன்று விண்ணுக்குச் சென்றது-நீயோ
என்று தெரியாமல் அலைமோதுகின்றோம்.
வந்து சொல்வாயோ-நான்
மரணிக்கவில்லை உங்கள் மனங்களிலேயே
எப்போதும் வாழ்வேன் என்று தான் மொழிந்திடுவாயா....?
உன் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு
உன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

போராளிகள், பணியாளர்கள்,
போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு

(சி.10631)



## கருணா நிலையம்-கிளிநொச்சி

### முன்பள்ளி ஆரம்பம்-2005


கருணா நிலையத்தில் இயங்கி வந்த முன்பள்ளி மீள் புனரமைக்கப்பட்டு எதிர்வரும் 2005ஆம் ஆண்டு தை மாதம் ஆரம்பமாகவுள்ளது என மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.


3½வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளை இப்பள்ளியில் சேர்க்கலாம். விண்ணப்பப்படிவங்களை கருணா நிலையத்தில் (ஏ-9 வீதி காவல் பணிமனைக்கு முன்பாக) இப்போது பெற்றுக்கொள்ளலாம்.

முகாமையாளர்,
கருணாநிலையம்,
கிளிநொச்சி.
[தொ.பே. 2285936]

(5285)

# பிரிஸ்பேன் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி
## அவுஸ்திரேலிய அணிக்கு அபார வெற்றி





பிறிஸ்பேனில் நடைபெற்ற நியூசிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அவுஸ திரேலிய அணி ஒருஇன்னிங்ஸ் 156 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றது பெற்ற நியூசிலாந்து முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. அதன்படி அவ்வணி தனது முதல் இன்னிங்சில் 353 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தது. முதல் இன்னிங்சில் அவ் வணி வீரர் ஜேக்கப் ஓரம் 126 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக் காதிருந்தமை குறிப்பிடத்தக்கது.



பதிலுக்கு தனது முதல் இன்னிங்சை தொடங்கிய அவுஸ்திரேலியா 4ஆம் நாளாகிய நேற்றுக்காலை 585 ஓட்டங்களைப் பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. கிளார்க், கில்கிறிஸ்ட் ஆகியோர் (141,126) சதமடித்தனர். இப் போட்டியில் விட்டோரி 4 விக்கெட்டுக்களையும்; கிறிஸ் மார்ட்டின் 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பின்னர் தனது இரண்டாவது இன்னிங்சை ஆரம்பித்த நியூசிலாந்து அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களுக்கு ஈடுகொடுக்க முடியாது மளமன என வெளியேறினர். அவ்வணியின் ஆஸ்லே, பிளமிங் அகியோர் மட்டுமே (11,17) இரட்டை எண்ணிக்கையான ஓட்டங்களைப் பெற்றனர்.

இறுதியில் 76 ஓட்டங்களுக்கு நியூசிலாந்து அணி அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வி அடைந்தது. பந்து வீச்சில் ஷேன்வோர்ன் 4 விக்கெட்டுக்களையும், மெக்ராத் 3 விக்கெட்டுக்களையும் கிளெஸ்பி 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

# பெண்கள் உலகக்கிண்ண கிரிக்கெட்;
## மேற்கிந்திய தீவுகள் அணி பங்கேற்காது?

எதிர்வரும் 2005ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடைபெறும் பெண்களுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் மேற்கிந்தியத் தீவுகளின் பெண்கள் அணி பங்குபற்றாத அறிகுறி தென்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வருட இறுதிப்பகுதி வரைக்குமான அவர்களுக்கான விளம்பர ஒப்பந்தங்களுக்கான கொடுப்பனவையும், கிரிக்கெட் சபையால் வழங்கப்படும் கொடுப்பனவுகளுமாக மொத்தம் 2 இலட்சம் அமெரிக்க டொலர்கள் இதுவரை வழங்கப்படாததே இதற்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சுற்றுப்பயணம் தடையேற்படுமாயின் தமது நாட்டுக்கு இழைக்கும் பெரும் துரோகம் என பயிற்றுநர் ஆன் பிரவுன் பி.பி.ஸியிடம் தெரிவித்துள்ளார். இச்சுற்றுப்போட்டிக்கான முழுப் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் மேற்படி உலகக்கிண்ணப் போட்டிக்காக அவர்கள் எவ்வளவு தொகையைக் கோருவார்கள் என்பதைக் கூறமுடியாது என பிரவுன் ஜோன் மேலும் தெரிவித்துள்ளார்.

# நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில்
## 110 ஆண்டு சாதனையை சமன் செய்தார் கிளார்க்



நியூசிலாந்துக்கு எதிராக பிரிஸ்பேனில் சனிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் 141 ஓட்டங்களைக் குவித்து சதம் அடித்ததன் மூலம், தாயகத்தில் மட்டுமல்லாது வெளிநாடுகளிலும் முதல் போட்டியிலேயே சதம் அடித்த 2ஆவது அவுஸ்திரேலிய வீரர் எனும் சிறப்பைப் பெற்றார் 23 வயதாகும் கிளார்க்.


110 ஆண்டுகளுக்கு முன்னதாக ஹாரி கிரஹாம் எனும் அவுஸ்திரேலிய வீரர் உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் ஆடிய முதல் போட்டியில் சதம் அடித்துள்ளார்.

1893இல் லோர்ட்ஸில் இங்கிலாந்துக்கு எதிராக 107 ஓட்டங்களையும், தாயகத்தில் சிட்னியில் 1894இல் நடைபெற்ற போட்டியில் அதே இங்கிலாந்துக்கு எதிராக 105 ஓட்டங்களையும் சேர்த்துள்ளார் அவர்.

பெங்களூரில் கடந்த மாதம் நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான 4 டெஸ்ட் தொடரின் முதல் போட்டியில் 151 ஓட்டங்களைக் குவித்தார் கிளார்க். இதேபோலான உள், வெளிநாடுகளில் ஆடிய முதல் போட்டியில் சதம் அடித்த சிறப்பை தென்னாபிரிக்காவின் கெப்ளர் வெஸல்ஸூம பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

### கான்பூர் டெஸ்ட் போட்டி

# அன்ருகோலின் நின்று நிலைத்த ஆட்டம்
## வலுவான ஓட்டம் நோக்கி தென்னாபிரிக்கா



இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கான்பூரில் நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாம் நாளான நேற்றைய ஆட்டநேர முடிவில் முதலில் துடுப்பெடுத்தாடும் தென்னாபிரிக்கா 7 விக்கெட்டுக்களை இழந்து 459 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.


முன்னதாக 230 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் இரண்டாம் நாள் ஆட்டத்தைத் தொடர்ந்த தென்னாபிரிக்கா அன்ருகோலின் சிறப்பாட்டத் துணையுடன் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தது.

ஆட்டமிழக்காது 78 ஓட்டங்களைப் பெற்றிருந்த 'கோல்' சதமடித்ததுடன் 163 ஓட்டங்களைப் பெற்று கும்ளேயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இவரைவிட புறுயின் 83 ஓட்டங்களையும், டிப்பன்னர் 48 ஓட்டங்களையும், பொலக் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் கும்ளே 5 விக்கெட்டுக்களையும், கங்குலி, ஹர்பஜன்சிங் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாளாகும்.

# தனது உடல் தகுதியை நிரூபிக்க
## முரளிதரன் நாளை அவுஸ். பயணம்



எதிர்வரும் டிசம்பர் 21ஆம் திகதி முதல் நியூசிலாந்து அணியுடன் ஆரம்பமாகும் டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்க முன்பு சிறிலங்காவின் முத்தையா முரளிதரன் மீண்டும் தனது உடற்தகுதியை நிரூபிக்க வைத்திய பரிசோதனை ஒன்றுக்கு முகம் கொடுக்கவுள்ளார்.

தோள் மூட்டில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் கடந்த ஆகஸ்ட் முதல் போட்டிகளில் பங்கெடுக்காதிருந்தார். எனினும், இச்சுற்றுத் தொடரில் தான் பங்கேற்பதாகக் கூறினார்.

அவர் தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டு வந்தாலும் மீண்டும் தனது உடற்தகுதியை உறுதிப்படுத்த வேண்டியிருக்கிறது.

இதன்படி இவர் நாளை மெல்போர்ன் நோக்கி பயணமாகவுள்ளார். எனினும் அணியின் இன்னுமொரு சுழற்பந்து வீச்சாளர் ரங்கன ஹேரத் இடம் பிடிக்காத பட்சத்திலேயே முரளிதரனுக்கு வாய்ப்புக் கிடைக்கும். இதற்கிடையில் உப்புள் சந்தனவும் நோய் வாய்ப்பட்டு வெளிநாட்டுச் சிகிச்சைக்குச் சென்றிருக்கிறார்.




# மாவீரர் வெற்றிக்கிண்ண கால்பந்து
## அரையிறுதிப் போட்டி இன்று ஆரம்பம்



மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான கால்பந்து சுற்றுப் போட்டியின் கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி கோட்டத்துக்கான தெரிவுப் போட்டிகளில் நேற்று மூன்று போட்டிகள் நடைபெற்றன.

மருதநகர் உதயதாரகை மைதானத்தில் நடைபெற்ற மேற்படி போட்டியில் மாலதி அணியை எதிர்த்தாடிய உழவர் ஒன்றியம் அணி 1-0 என்ற கோல் எண்ணிக்கையிலும், ஸ்கந்தாஅணியை எதிர்த்தாடிய லக்கிஸ்ரார்2-0 என்ற கோல் எண்ணிக்கையிலும், உதயதாரகை அணியை எதிர்த்தாடிய சந்திரோதயா அணி 2-0 என்ற கோல் எண்ணிக்கையிலும் வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவாகின. மற்றுமொரு கால் இறுதியாட்டம் உருத்திரபுரம், திருநகர் அணிகளுக்கிடையில் இன்று காலை 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து அரையிறுதிப் போட்டிகளும் நடைபெறவுள்ளன. மேற்படி போட்டிகளுக்கு இ. குவேந்திரன், ஸ்ரனி, சிவநேசன் ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர். (ச, தீ)

# மாவீரர் வெற்றிக்கிண்ணத்துக்கான
## மென்பந்து கிரிக்கெட் போட்டி

கிளிநொச்சி மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறையால் நடாத்தப்பட்டுவரும் மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் கிருஷ்ணபாரதி அணி, செந்தணல் அணி, பல்வன் அணி, தூயதமிழ் அணியும் வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

விநாயகர் அணிக்கும், இராமநாதபுரம் மத்திய அணிக்கும் இடையேயான போட்டி வெளிச்சமின்மையால் இடை நிறுத்தப்பட்டது. இப்போட்டி இன்று தொடர்ந்து நடைபெறும்.

இன்றைய போட்டியில் ஸ்கந்தா சந்திரன், இளந்தாரகை நியூஸ்ரார், கனகபுரம் கிருஷ்ணபாரதி செந்தணல், வளர்பிறை அணிகள் மோதவுள்ளன.

இப்போட்டிக்கு நடுவர்களாக தனபால் லெனின், தயா, சுபானந் ஆகியோர் கடமையாற் றினர்.


(ச, தீ)





வவுனியா மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறையால் நடாத்தப்பட்ட மாவீரர் வெற்றிக் கிண்ணத்துக்கான விளையாட்டுப் போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் வீரர்கள் அணிவகுத்து வருவதையும், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படம்) மகா

# மாஸ்டர் டென்னிஸ் இறுதிப் போட்டி
## பெடரர், ஹெவிட் பலப்பரீட்சை




ஹூஸ்டனில் நடைபெற்றுவரும் மாஸ்டர் டென்னிஸ் போட்டிகளில் மூன்றாவது தடவையாகவும் சம்பியனாகும் வாய்ப்பை சுவிற்சர்லாந்து வீரரும், உலகின் முன்னணி வீரருமான ரோஜர் பெடரர் குறிவைத்துள்ளார்.

அவரை எதிர்த்துப் போட்டியிடும் அவுஸ்திரேலியாவின் லெவிட்டன் ஹெவிட் அந்த வாய்ப்பை அற்றுப் போகச் செய்ய முயற்சிக்கவுள்ளார்.

ஆடவர்களுக்கான உலக டென்னிஸ் தரவரிசையில் முதலாம் இடம் வகிக்கும் பெடரர் இறுதிப் போட்டியில் ஹெவிட்டிடம் சவால்களை எதிர்நோக்கமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் இறுதியாட்டம் உட்பட ஐந்து தடவைகள் ஹெவிட்டை எதிர்த்தாடிய பெடரர் அவை அனைத்திலும் இலகுவாக வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.



## சிந்தனைக்கு

உலகவரலாற்றில் எங்கும் எப்பொழுதும் நிகழாத அற்புதமான தியாகங்களும் அதிசயமான அர்ப்பணிப்புகளும் எமது தாயக மண்ணில் நிகழ்ந்திருக்கின்றன.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 22-11-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

# சதிகள் புதிதல்ல!

சிங்கள ஆட்சியாளர்கள் பல தடவைகள் தோற்றுப் போனதாகிலும் தனது நீண்ட கால தந்திரோபாயத்தை இன்னமும் கைவிடவில்லை என்பதையே வல்வெட்டித்துறை சிதம்பராக்கல்லூரி விளையாட்டு மைதானத்தில் விளையாடிக கொண்டிருந்த இரண்டு அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

இன அழிப்பு நடவடிக்கைக்கு நீண்டகாலமாகவே இனத் துரோகிகளைப் பயன்படுத்தி வந்துள்ள சிறிலங்கா ஆட்சியாளர்கள் அந்த வழியிலேயே இவ் அப்பாவி இளைஞர்களையும் சுட்டுக்கொன்றனர். இப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்ட இடம், நடத்தப்பட்ட முறை, மேற்கொள்ளப்பட்ட காலம் யாவற்றையும் அவதானிப்பின் இவை சிங்களப் படைத்தரப்பின் உதவியுடன் இன விரோதக் குழுக்கள் மேற்கொண்ட நடவடிக்கை என்பதில் சந்தேகம் கொள்ள எதுவுமே இல்லை. இதில் யாரும் சந்தேகம் கொள்வார்களேயானால் அவர்கள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தின் அடிச்சுவடே தெரியாதவர்களாகவே இருக்கமுடியும்.

அத்தோடு இப்படுகொலைச் சம்பவம் இடம் பெற்ற பின்னர் சிறிலங்கா அரசின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்களும் வழமைபோலவே தமிழ் மக்களுக்கு இடையில் வேறுபாடுகளை தோற்றுவிக்கும் வகையிலும், விடுதலைப்புலிகளுக்கும், மக்களுக்கும் இடையில் முரண்பாட்டை விளைவிக்கும் வகையிலும் பிரச்சாரத்தை மேற்கொள்ளத் தொடங்கின.

ஆனால் சிறிலங்கா அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள் குறித்து விளங்கிக் கொண்டுள்ள தமிழ் மக்கள் இப்பிரச்சாரம் குறித்து குழப்பம் எதையும் அடையவில்லை. மாறாக அரசின் செயல்களுக்கு எதிராகவே மக்கள் கொதிப்படைந்தனர். இதன் விளைவாக ஒருதொகுதி மக்கள் வீதிகளில் இறங்கினர் என்றே கூறலாம்.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் நீண்டதும்- குறுகிய கால நடவடிக்கைக்குமென இனவிரோதக் குழுக்களைப் பயன்படுத்திக் கொள்வதுண்டு. இதில் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கு எதிராக தொடர்ச்சியாக இன விரோத உத்திகளைப் பயன்படுத்துதல் ஒரு வகை, தமிழ் மக்களின் உணர்ச்சி பூர்வமான, எழுச்சி பூர்வமான நிகழ்வுகளின் போது அவற்றை குழப்பத்திற்கு உள்ளாக்கும் வகையில் தமிழ் இனவிரோதக் குழுக்களைப் பயன்படுத்துதல்.

ஆனால் பொதுவில் கிழக்கிலேயே இந்நடவடிக்கைகளுக்கென தமிழ் தேசவிரோதக் குழுக்களை பயன்படுத்திக் கொள்வதுண்டு. கிழக்கில் காணப்படும் அரசியல் சூழ்நிலை இத்தகைய நடவடிக்கைக்கு வாய்ப்பளிப்பதுண்டு. ஆனால் வடக்கில் இவ்வாறு பயன்படுத்தியதில்லை என இது அர்த்தப்படாது.

இந்தவகையில் தற்பொழுது மாவீரர் நாள் நிகழ்வுகளிற்காகவும், தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களின் 50 ஆவது பிறந்தநாள் நிகழ்வுகளை ஒட்டியும் தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் எழுச்சி மற்றும் பங்களிப்பு என்பன குறித்து வெறுத்துப் போயுள்ள சிறிலங்கா ஆயுதப் படைத்தரப்புக்கு இப்படுகொலைகளைச் செய்வதன் மூலம், மேற்படி நிகழ்வுகளை குழப்பத்திற்கும் நெருக்கடிக்கும் உள்ளாக்குவதே நோக்கமாகஇருந்தது.

கடந்த பல வருடங்களாக ஒவ்வொரு மாவீரர் நாள் காலங்களில் பெரும் பயப்பீதியுடனும்அச்சத்துடனும் காலம் கழித்து வந்த சிறிலங்கா அரசபடைத்தரப்பு- இம்முறை புலிகள் யுத்த நிறுத்தத்தை தீவிரமாக கடைப்பிடித்து வரும் நிலையில் எழுச்சியுடன் மாவீரர் நாளை கடைப்பிடிக்க முற்பட்டு நிற்கின்ற மக்களையும் அமைதி காக்கும் விடுதலைப்புலிகளையும் சீண்டிப்பார்க்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்படுகொலைச் செயல்கள் மூலம் மாவீரர் தின நிகழ்வுகளில் இருந்தும், தேசியத் தலைவரின் பிறந்த நாள் நிகழ்வுகளிலிருந்தும் மக்களை ஓரம் தள்ளிவைக்கவும், ஒதுங்கியிருக்க வைக்கவும் முடியுமென சிறிலங்கா அரசாங்கம்/ ஆயுதப்படைதரப்பு கருதுவது போன்றுள்ளது.

ஆனால் இத்தகைய செயற்பாடுகள் தந்திரங்கள் யாவும் தமிழ் மக்களிடம் ஏற்கனவே தோற்றுப் போனவையாகும். தமிழ் மக்களை அச்சமுட்டி பணியவைக்கலாம் என்றோ, குழப்பத்திற்குள்ளாக்கி திசை திருப்பி விடலாம் என்றோ சிறிலங்காத் தரப்பு கருதுமேயானல் அது கடந்த காலவரலாற்றை மறந்த செயலாகவே இருக்கும்.

தமிழ் மக்களைப் பொறுத்து அவர்கள் விழிப்புப் பெற்றவர்களாகவே உள்ளனர். சிறிலங்கா அரசு பற்றியும், அதன் ஆயுதப்படைத்தரப்புப் பற்றியும் அவர்கள் நன்கு விளங்கிக் கொண்டவர்கள் அவர்களை அச்சமுட்டுவதோ குழப்பத்திற்குள்ளாக்குவதோ சாத்தியமானது அல்ல அவ்வாறு ஒன்று சாத்தியமாகுமேயானால் இதுவரை சந்தித்த நெருக்கடிகள் தமிழ் மக்களைத் திசைதிருப்ப சிறிலங்கா ஆட்சியாளர்கள் மேற் கொண்ட நடவடிக்கைகளைத் தாண்டி உரிமைக்கான போராட்டம் இன்னமும் வலுப் பெற்றதாக இருக்க மாட்டாது.

---

## தமிழீழ மாவீரர் நாள்–2004

# வரலாற்றில் தனிச்சிறப்புப் பெறும் தமிழீழ மாவீரர் நாள்

1989ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் நாளை முதலாவது தமிழீழ மாவீரர் நாளாகத் தமிழீழம் உணர்வாந்த நிலையில் கடைப்பிடித்தது. அன்றிலிருந்து தமிழீழத்தின்மிகப்பெரிய நிகழ்வாக,எழுச்சியாக , புனிதமாக உணர்வாந்த நிகழ்வாக தமிழீழ மாவீரர் நாள் மக்களால் கடைப் பிடிக் கப்பட்டு வருகின்றது.

ஏனைய நாடுகளில் மாவீரர்நாள் கடைப் பிடிக்கப்படுவதற்கும், தமிழீழ மாவீரர் நாள் கடைப் பிடிக்கப்படுவதற்கும் பெரும் வேறுபாடுகளுண்டு. ஏனைய நாடுகளில் எல்லாம் விடுதலைக்குப்பின் அமைந்த அரசுகளால் விழாக்கள் எடுக்கப் படுகின்றவே தவிர, போராட்டம் வீறோடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலங்களில் விழாக்கள் எடுக்கப் படுவதில்லை. ஆனால் விடுதலைப் போராட்டம் வீறோடு நடைபெற்றக்கொன்டிருக்கும் நிலையிலும் எதிரியின் அச்சுறுத்தல்கள்தாக்குதல்களுக்கிடையிலும் பல்வேறு நெருக்கடிகளுக்கிடையிலும் போராட்டத்தையும் நடத்திக்கொண்டு தமிழீழ மக்கள் மண்ணின் விடிவிற்காகத் தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களை எழுச்சியோடு நினைவு கூர்ந்து வருகின்றனர். மாவீரர்களின் பெற்றோர்களை , குடும்பத்தினரைப் போற்றிச்சிறப்பிக்கின்றனர்.

வீரச்சாவடையும் தமிழீழ மாவீரர்களது வித்துடல்கள் மாவீரர் துயிலுமில்லங்களில் கல்லறைகளில் விதைக்கப்பட்டும் வழிபாடாற்றப்படுகிறது மாவீரர் நாளில் மாவீரர்களின் பெற்றோர் குடும்பத்தினர் மாவீரர்களை நினைவு கூரும், நிகழ்ச்சிகளில்கலந்து கொள்ளவதற்காக எல்லா ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டு அன்று தமிழீழ மக்களால் போற்றி மதிப்பளிக்கப்படுகின்றனர் உலகில எங்குமே தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வு போல மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுகள் அவர் களின் பெற்றோரும் குடும்பத்தினரும் போற்றப் பட்டு மதிப்பளிக்கப்படும் நிகழ்வுகள் நடை பெற்றதாகவோ நடைபெறுவதாகவோ வரலாறில்லை.

### மாவீரர் எழுச்சி நாட்களின் நிகழ்வுகளும் நடைமுறைஒழுங்குகளும்

1989 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் நாளை மாவீரர் நாளாகவும்,1990ஆம் ஆண்டில் இருந்து 1994 ஆம் ஆண்டு வரை நவம்பர் 21 நாளிலிருந்து 27 ஆம் நாள் வரை மாவீரர் எழலாகவும்(வாரமாகவும்) தமிழீழ மக்களால் எழுச்சி நிகழ்வாக நடை பெற்ற வந்த தமிழீழ மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் 1995 ஆம் ஆண்டிலிருந்து நவம்பர் 25 ஆம் நாள் முதல் 27 ஆம் நாள் வரை மூன்று நாட்களில் எழுச்சி நாட்களாக்க கடைபிடிக்கப்படுகின்றது.

தமிழீழ மாவீரர் பணிமனை

---

# பாகிஸ்தான் பிரதமர் தலைமையிலான உயர் மட்டக் குழு இலங்கைக்கு விஜயம்

பாகிஸ்தான் பிரதமர் சௌகத் அசீஸ் இலங்கைக்கு உத்தியோக பூர்வமாக இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்று கொழும்பை வந்தடைந்துள்ளார்.

இவருடன் 30 பேரைக் கொண்ட தூதுக்குழு ஒன்று விஜயம் செய்துள்ளது. இக் குழுவில் பெற்றோலியத்துறை அமைச்சர் அமானுல்லாகான் புகையிரதத் துறை அமைச்சர், நீர் எரிபொருள் துறை அமைச்சர், கலாசார இளைஞர் விவகார அமைச்சர் முகமத் அலியுராணி, வெளிவிவகார அமைச்சர், பாகிஸ்தான் குடிவரவு-குடியகல்வு விவகார ராஜாங்க அமைச்சர் உட்பட செனட் சபை உறுப்பினர்கள் 03 பேரும், பாராளுமன்ற உறுப்பினர்கள் 07 பேரும் இக் குழுவில் அடங்கியுள்ளனர்.

பாகிஸ்தான் பிரமதமருக்கு விமான நிலையத்தில் கடற்படை மரியாதை அணிவகுப்பு இடம் பெற்றுள்ளது. இவர் நேற்று மாலை 5.00 மணிக்கு சனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்துள்ளார். இவர்கள் இருவரும் வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமாக பேச்சுவார்த்தைகளின் போது கவனம் செலுத்தியுள்ளனர். சார்க் அமைப்பின் கடமை, பொறுப்புக்கள் தொடர்பாகவும் இதன் போது ஆராயப்பட்டுள்ளது இச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சா கதிர்காமரும் இடம்பெற்றுள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் மகிந்தராஜ பக்ஷவையும் சந்தித்துள்ளார்

---

## அரசியல் கட்சிகள் எவையும்

# மரணதண்டனை தொடர்பாக நேரடியாக கருத்துக் கூறவில்லை

சிறிலங்காவில் மரண தண்டனை அமுலாக்கம் கொண்டு வரப்பட்டமை தொடர்பாக எந்த ஒரு அரசியல் கட்சியும் இதுவரை நேரடியான கருத்துக்களை தெரிவிக்கவில்லை. பௌத்த கட்சியான ஜாதிக ஹெல உறுமய இது தொடர்பாக கூறுகையில் இந்த மரண தண்டனை மூலமாக மாத்திரம் இலங்கையில் இடம் பெறும் குற்றச்செயல்களை தடுக்க முடியுமா? என்ற கேள்வியை எழுப்பியுள்ளது. இதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியும் இதே கருத்தையே தெரிவித்துள் ளது. முறையாக செயற்படுத்தப் படவேண்டுமானால் இந்த தண்டனை பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவேண்டும் எனத் தெரிவித்துள்ள அந்தக்கட்சி. சனாதிபதி முறையான பாதுகாப்பு ஒழுங்கை பின்பற்றியிருப்பாராக இருந்தால், நாட்டின் குற்றச் செயலை கட்டுப்படுத்தியிருக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளது இதேவேளை தற்சமயம் இலங்கையில் தூக்கு தண்டனையை நிறைவேற்றும் தூக்கு மரம் வெலிக்கடையிலும், கண்டி போகம்பறையிலும் நல்ல நிலையில் இருப்பதாக நீதி அமைச்சர் ஜோன் செனவிரட்ன தெரிவித்துள்ளாா எனினும் தற்சமயம் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள வர்களுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்படுமா என்ற தீர்மானம இன்னும் எடுக்கப் பட வில்லை. நாடளாவிய ரீதியில் தற்சமயம் நூற்றுக்கணக்கானோர் மரண தண்டனை கைதிகளாக சிறைகளில இருந்து வருகின் றனர். இலங்கையில் சுமார் 27 வருடங்களுக்கு பின்னரே மரண தண்டனை நிறைவேற்றும் சட்டம் அமுல் செய்யப்படுகிறது (32)

---

# ஐ.தே.க.விலிருந்து 11 பேர் தமது கட்சியில் இணைவராம்

## —ஐ.ம.சு முன்னணியினர் தெரிவிப்பு

ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து மேலும் 11 பேர் தமது கட்சியுடன் இணைந்துக்கொள்ளப்போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தரப்புகள் கூறுகின்றன. ஏற்கனவே வரவு செலவுத்திட்டம் சமாப்பிக்கப்பட்ட தினத்தன்று ஐக்கிய தேசியக் கட்சியின் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோகித்த போகொல்லாகம அரசாங்க கட்சியில் இணைந்து கொண்டார். இந்த நிலையில் மேலும் 11 பேர் தமது அரசாங்கத்தில் இணைந்துக்கொள்ளப்போவதாக தெரிவிக்கப் பட்டுள்ளது எனினும் இதனை ஐக்கிய தேசியக் கட்சி மறுத்துள்ளது. இதேவேளை அரசாங்கம் சமர்ப்பித்துள்ள வரவு செலவுத்திட்டமானது இன்னும் மூன்று மாதங்களுக்குள் நடத்தப்படவுள்ள சர்வசன வாக்கெடுப்புக்கான தேர்தல் வாக்குறுதியாகும் என அந்தக் கட்சி தெரிவித்துள்ளது (32)

---

## விபத்தில் பலி

கடற்படையினருக்கு சொந்தமான ட்ரக் வண்டி ஒன்று நேறறுக காலை நிட்டம்புவ நகரில ஈருருளி ஒன்றை மோதியதில் ஈருருளியில் சென்ற ஒருவர் பலியாகியுள்ளாா். ட்ரக் வண்டியின் சாரதி தனியா பஸ்சை முந்திச்செல்ல முற்பட்டவேளை கட்டுப்பாட்டை இழந்த வாகனம் மோதியமை குறிப்பிடத்தக்கது.

---

# கடமை நேரத்தை நீடிக்க அரசு தீர்மானிக்கவில்லை

## —அமைச்சர் லால்காந்த தெரிவிப்பு

அரச ஊழியர்களின் கடமை நேரத்தை ஒரு மணித்தியாலத்தால் நீடிக்கும் தீர்மானத்தை அரசு எடுக்கவில்லை என அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவரும் ,அமைச்சருமான லால்காந்த தெரிவித்துள்ளார் நேற்று கொழும்பில் இடம் பெற்ற செய்தியாளார் மாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவத்துள்ளார். தொடர்ந்து அவர் கருத்துத்தெரிவிக்கையில் இதன் அடிப்படை நோக்கம் வேலை செயயும் நேரத்தை சுயமாக அதிகரிப்பது இதனிடையே எட்டு மணித்தியாலயத்திற்கு மேலதிகமாக சேவையாற்றக் கூடியவர்கள் உள்ளனர் ஆசிரியர்கள் அவ்வாறு கடமையாற்றுகின்றதால் அரச சேவையை வினைத்திறன் ஆக்கும் நோக்குடன் இவ் கருத்து முன்வைக்கப்பட்டுள்ளதென தெரிவித்துள்ளார்

# தொடர் மழையினால் வெள்ளப்பாதிப்பு

# குளங்கள் பல வான்பாய்கின்றன

## இரணைமடு வான் கதவுகள் திறப்பு

(அலுவல செய்தியாளர்)

தற்போது பெய்து வரும் கடும் மழைகாரணமாக நீர்ப்பாசனக் குளங்களில் நீர்மட்டங்கள் வெகுவாக உயர்ந்துள்ளதுடன் வான் பாயத் தொடங்கியுள்ளது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம்32இற்கு உயர்ந்துள்ளதன் காரணமாக நீர்ப்பாசனத் திணைக்களத்தினரால் நேற்று பகல் வான்கதவுகள் ஒன்றரை அடி திறக்கப்பெற்று குளத்துநீர் வெளியேற்றப்பட்டு வருகின்றது.

குளங்கள்யாவும் வான்பாயத் தொடங்கியுள்ளதன் விளைவாக குறிப்பிட்ட சில இடங்களில் வீதிப் போக்குவரத்துக்கள் தடைப்படக் கூடிய ஏதுநிலை உருவாகியுள்ளது.



இரணைமடு...



தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக பல கிராமங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பெற்றுள்ளன. ஏற்கனவே வெள்ளத்தின் காரணமாக பாடசாலைகளில் தஞ்ச மடைந்து மீண்டும் சொந்த வீடுகளுக்கு திரும்பிய குடும்பங்கள் மீண்டும் பாடசாலை களிலும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

கிளிநொச்சி முறிகண்டி, பரந்தன், முரசு மோட்டை, குமரபுரம் பகுதிகளில் உள்ள பலகுடும்பங்கள் நேற்று வெள்ளத்தின் காரணமாக பலத்த பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

உருத்திரபுரம் 8ஆம் வாய்க்கால் கிராமத்தில் வெள்ளம் பாய்வதன் காரணமாக வீதிகள்யாவும் சேதமாகியுள்ளதுடன், அக்கிராம மக்கள் அனைவரும் பலத்த சிரமங்களுக்கு மத்தியிலேயே போக்குவரத்தினை மேற்கொண்டு வருவதனை நேற்று அவதானிக்க முடிந்தது.

நேற்று பிற்பகல் பெய்த மழை காரணமாக 8ஆம் வாய்க்காலின் 3ஆம் குறுக்கு, 4ஆம் குறுக்கு வீதிகளில் வெள்ளம் அதிகரித்து காணப்பட்டதனால் அப்பகுதியிலிருந்த குடும்பங்கள் பல வேறு இடங்களுக்கு சென்றதனை காணக் கூடியதாக இருந்தது.

மேலும் தொடர்ந்து மழை பெய்யும் பட்சத்தில் இக்கிராமம் வெள்ளத்தினால் சூழப்படக்கூடிய அபாயநிலை தோன்றக்கூடு மென 8ஆம் வாய்க்கால் கிராம மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.(சோ)

# விறகுகாலை காவலாளியை கட்டிவைத்து இராணுவம் 3 மணிநேரம் விசாரணை

## நல்லூரில் இராணுவம் அத்துமீறல்

யாழ்ப்பாணம் நல்லூரிலுள்ள விறகுகாலையொன்றில் நேற்று அதிகாலை இராணுவத்தினர். காவலாளியை கட்டிவைத்து விட்டு தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதுகுறித்து சிறிலங்கா போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் புகார் செய்யப்பட்டுள்ளது. 19 வயதுடைய திருச்செல்வம் ஜசிந்தன் என்பவர் இராணுவத்தினரால் கட்டி வைக்கப்பட்டு சுமார் 3 மணி நேரம் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். அதிகாலை விறகுகாலைக்குள் நுழைந்த இராணுவத்தினர் 3.00 மணி முதல் 6.00 மணி வரை தேடுதல் நடத்தியுள்ளனர் வன்னியிலிருந்து விடுதலைப்புலிகளினால் கொண்டு வரப்பட்ட ஆயுதங்கள் அங்கு மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறி விசாரணை செய்து இந்தத் தேடுதலை இராணுவத்தினர் நடத்தியுள்ளனர்.

# பொலிசார் எடுத்துச் சென்ற ஈருருளிகளை ஒப்படைக்க மக்கள் வலியுறுத்து

## – கொடிகாமம் பொலிஸ் நிலையம் முன் மக்கள் திரண்டனர்

கொடிகாமத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது மக்களின் போராட்டத்தின் போது சிறிலங்காப் பொலிசாரினால் பலாத்காரமாக எடுத்துச் செல்லப்பட்ட ஈருருளிகளை ஒப்படைக்கக் கோரி மக்கள் பொலிஸ் நிலையம் முன்னால் கூடியதால் நேற்றுக்காலை 10.30 மணியளவில் பெரும் பதட்டம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து சம்பந்தப்பட்ட இளைஞர்களின் ஈருருளிகளை உடனடியாக ஒப்படைப்பதாக பொலிசார் தெரிவித்ததை அடுத்து பொதுமக்கள் கலைந்து சென்றனர். திடீர் என பொதுமக்கள் கூடியதால் காலை இப்பகுதி பெரும் பரபரப்பாய் காணப்பட்டது. (28)

# குற்றச் செயல்களுக்கு தண்டப்பணம் பெருமளவில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டத்தின் மூலம் குற்றங்களுக்கான அபாரத தொகைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதன்படி குற்றங்களுக்கான அபாரத்தொகைகள் பெருமளவு அதிகரிக்கப்பட்டுள்ளன. 1898 ஆம் ஆண்டுக்கு பின்னர் குற்றச்செயல்களுக்கான அபாரத் தொகைகள் பாரிய அளவில் அதிகரிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் இதுவாகும். சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்களுக்கு இதுவரை விதிக்கப்பட்டு வந்த 10 ஆயிரம் ரூபா தண்டனை புதிய வரவு செலவுத்திட்டத்தின் மூலம் 25 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளன. உந்துருளிகளில் ஓட்டுநர் அனுமதிப்பத்திரம் இன்றி உந்துருளி செலுத்துவோருக்கு விதிக்கப்பட்டு வந்த 150 ரூபா 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. கொள்ளைச்சம்பவங்களுக்கான தண்டனை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவரை அதிகரிக்கப்பட்டுள்ளன. கடந்த பல வரவு செலவு திட்டங்களில் பொதுவாக குற்றங்களுக்கானஅபராதத் தொகைகள் 2ரூபா முதல் 100 ரூபா வரையிலான அதிகரிப்பையே கொண்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசும்–புலிகளும் கேட்டதற்காகவே ஏற்பாட்டாளராக நோர்வே பங்காற்றுகிறது

## – இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர்

தமிழீழ விடுதலைப்புலிகளும் சிறிலங்கா அரசாங்கமும் கேட்டுக் கொண்டமைக்கு அமையவே தமது நாடு இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் ஏற்பாட்டாளர் நிலையை வகித்து வருகிறது. அந்த இரண்டு தரப்பும் கேட்டுக் கொண்டால் தமது நாடு இந்த ஏற்பாட்டாளர் நிலையில் இருந்து விலகிக்கொள்ளும் என நோர்வேயின் தூதர் ஹான்ஸ் பிராஸ்கர் தெரிவித்தார். நேற்று முன்தினம் அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றிய அவர் தமது நாடு வடக்கு கிழக்கு மற்றும் தென்பகுதிகளுக்கு சமாதானம் ஏற்படவேண்டும் என்பதற்காகவே நிதியுதவிகளை வழங்கி வருகிறது அதன் அடிப்படையில் தென்னிலங்கையின் அபிவிருத்திக்கு நோர்வே 3 ஆயிரம் மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.(32)

### வல்லையில்...

யாளர் சூரியகுமார்,வலி வடக்கு க.தொ.கூட்டுறவுச்சங்க தலைவர், சிதம்பரா கல்லூரி அதிபர் அரியரட்ணம் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம்,யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்தினர். அஞ்சலி உரைகளை தொடந்து யா/வல்லை சிவகுரு வித்தியாசாலை மாணவர்களின் பாண்ட்வாத்திய இசையணி வகுப்பு மரியாதையுடன் இருவரின் பூதவுடல்களும் ஊர்தியில் எடுத்துச் செல்ல அதனைத் தொடந்து பொதுஅமைப்புக்கள், கூட்டுறவாளர்கள், கடற்றொழிலாளர் சங்கத்தினர், விளையாட்டுக் கழகங்கள் என பல்லாயிரக்கணக்கான மக்கள் இவ் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இவர்களது பூதவுடல்கள் மயானத்துக்கு தகனக் கிரிகைக்காக எடுத்துச் செல்லப்பட வீதிகள் தோறும் வாழைகள்,தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன. அஞ்சலி மண்டபத்தில் இருந்து 12.30 மணியளவில் பூதவுடல் எடுத்து மயானம் நோக்கி சென்றடைய 1 மணித்தியாலத்திற்கு மேலாகியது. ஊறணி மயானத்தில்பூதவுடல்கள் தகனக்கிரியைகள் செய்யப் பட்டன. (கா,27,33)

### புலிகளின் அலுவலகங்கள்...

ஏனெனில் இங்குள்ள பாதுகாப்பு நிலைகள் வெளியிலிருந்து யாரும் வந்து செல்லக்கூடிய விதத்தில் இல்லை.

இதே வேளை இப்படியான தாக்குதல் சம்பவங்களுக்கிடையில் உள்ள பொதுத் தன்மையை பார்க்கின்ற போது இவை விடுதலைப் புலிகளின் செயலாகத்தான் எமக்குத் தெரிகின்றது.

இதனைக் கருணா தரப்பினர் செய்திருக்கலாம் என்று யாராவது கேட்டால் நாங்கள் அண்மைக் காலங்களில் கருணா தரப்பினர் செய்த தாக்குதல்களை ஆராய்ந்து பார்த்தபோது அவர்கள் செய்த தாக்குதல்கள் பிழைத்ததோ அல்லது தவறியதோ கிடையாது. ஆகவே விடுதலைப் புலிகளே இராணுவத்தினருக்கு அவப்பெயரை உண்டுபண்ணுவதற்காக செய்த தாக்குதல்கள் போல எங்களுக்குத் தென்படுகின்றது. என்றார் அவர்.

### காயமுற்றவரை...

சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த பொ.தெய்வேந்திரம் என்பவருக்கு இராணுவச் சீருடை அணிவித்து வைத்தியசாலையின் அனுமதி இன்றி அழைத்துச் சென்றனர்.

இது குறித்து வைத்தியசாலை நிர்வாக அதிகரிகளால் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருந்ததைத் தொடர்ந்து நேற்றைய தினம் வைத்தியசாலைக்குச் சென்ற பொலிசார் மற்றும் படைஅதிகாரிகள் தம் தவறுக்கு மன்னிப்புக் கோரியுள்ளனர். (33)

### காவலரண்களைத்...

நேற்று முன்தினம் மீசாலைப் பகுதியில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்ததை யடுத்து மாலை மீசாலைப் பகுதியிலும், புத்தூர் சந்திப்பகுதியிலுள்ள இராணுவ முகாம்கள் மீது மக்கள் கல் வீசித் தாக்கியதுடன் இராணுவக்காவலரண்களை தீயிட்டு எரித்தமை குறிப்பிடத்தக்கது.

இக்காவலரண்கள் மக்களின் தாக்குதலுக்கு உள்ளான வேளையில் இராணுவத்தினர் அங்கிருந்து தப்பியோடியிருந்தனர். (28)

# வடபிராந்திய போ.ச ஊழியர் அடையாள வேலை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்கள் நேற்றுக்காலை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து ஒன்று நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறக்கூடாதெனக் கோரியுமே இந்த வேலை நிறுத்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

### மாவீரர்...

பெற்ற ஆரம்ப நிகழ்வில் வடமராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.தயா தேசியக் கொடியினை ஏற்றி வைக்க பொது அமைப்புக்களின் ஒன்றியப் பொறுப்பாளர் சுபாஸ் ஈகச்சுடரினை ஏற்றிவைத்தார்.

தென்மராட்சியின் கொடிகாமம் மாவீரர் துயிலுமில்லத்தினில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி தேசியக் கொடியினை ஏற்றி வைக்க, தென்மராட்சிக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சிவநாத் ஈகச் சுடரினை ஏற்றி வைத்தார்.

இதேவேளை தீவகத்தின் சாட்டி மாவீரர் துயிலுமில்லத்தில் இடம்பெற்ற ஆரம்ப நிகழ்வில் தீவகக் கோட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் கண்ணன் தேசியக் கொடியைஏற்றிவைக்க, வேலணை அரசியல் துறைப் பொறுப்பாளர் யாழ். நம்பு ஈகச்சுடரினை ஏற்றி வைத்தார். (28,27)

### இளைஞனின்...

தாக தங்களுக்கு அறிக்கை தர வேண்டும் என்றும் மிரட்டியுள்ளதாக தெரியவருகிறது. பொது மக்களை படுகொலைகள் செய்துவிட்டு பழியை வேறு திசையில் நகர்த்த படையினர் எடுத்துவரும் சதி நடவடிக்கைகளை பொது மக்கள் கண்டித்துள்ளனர். (28)

### புலிகளின்...

50 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது மட்டுமன்றி இராணுவத்தினரின் தொடர்ச்சியான வீதிப் பாதுகாப்பு கண்காணிப்புக்களில் உள்ள பகுதிகளாகும்.இப்படியிருந்தும் இப்படியான சம்பவங்கள் நடைபெற்றிருப்பது மக்கள் மத்தியில் அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

எதிர்வருகின்ற மாவீரர் நாளை முன்னிட்டு எமது அரசியல் போராளிகளினாலும், மக்களினாலும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மாவீரர் நாள் நிகழ்வு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இவ்வேளையில் இப்படியான கோழைத்தனமான சம்பவங்களை வன்மையாகக் கண்டிப்பதுடன் இதற்கான முழுப்பொறுப்பையும் சிறிலங்காப் படைதரப்பே ஏற்றுக்கொள்ள வேண்டுமென தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.